Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/790)


முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 20 செவ்வாய்க்கிழமை (05.07.2011) பக்கங்கள் 16 ஓசை – 279




தெஹிவளை மிருக காட்சி சாலை வயது 75 (02)



கூடைப்பந்தாட்ட வீரர்கள் கௌரவிப்பு (06)



சர்வதேச நீதிமன்றில் சேரப்போவதில்லை (09)



தயான் ஜயதிலக - கட்டுரை - (14)

## தேம்ஸ் நதியில் நீச்சல் காரைநகருக்கு நிதி சேகரிப்பு



பிரித்தானியாவில் உள்ள காரை நகர் நலன்புரிச் சங்கத்துக்கு நிதி சேர்க்கும் நடவடிக்கைக்காக ஈழத் தமிழ் பெண்ணான செல்வி வர்ஷினி தியாகலிங்கம் தேம்ஸ் நதியினை ஒரு மைல் தூர தொண்டு நீச்சல் நிகழ்வில் பங்கேற்றுள்ளார். இந் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் Royal Victoria Dock இல் நடைபெற்றது. இத் தொண்டு நீச்சலில் சுமார் 5,000 பேர் தத்தம் தொண்டு நிறுவனங்க ளுக்கு ஆதரவாக நீச்சலில் ஈடுபட்டிருந்தனர். இதில் காரைநகர் மருத்துவ சேவை மேம்பாட்டிற்காக செல்வி. வர்ஷினி தியாக லிங்கம் தானே முன்வந்து இத்தொண்டில் ஈடுபட்டுள்ளார்.

## முன்னாள் புலிகள் 544 பேர் நேற்று சமூகத்துடன் இணைவு

(வவுனியா)

வவுனியா புனர்வாழ்வு நிலையங்களில் கடந்த இரண்டு வருடகாலம் தொழிற் பயிற்சி களை பெற்ற முன்னாள் புலி உறுப்பினர்கள் 544 பேர் நேற் றுத் திங்கட்கிழமை வவுனியா நகரசபை கலாச்சார மண்டபத்தில நடைபெற்ற வைபவத்தில் சமு கத்துடன் இணைக்கப்பட்டார்கள்.





புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச் சர் சந்திரசிறி கஜதீர அமைச்சின் செயலாளர் எஸ் . திசாநாயக்க, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுனந்த ரணசிங்க, மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் உள் ளிட்ட பலர் இந்த வைபவத்தில்

(15ஆம் பக்கம் பார்க்க)

# எம்.ஓ.டி. நடைமுறை நீக்கம்

# டக்ளஸ் முயற்சிக்கு பலன்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு கடவுச்சீட்டைக் கொண்டுள்ளவர்கள் வடபகுதிக் குச் செல்வதற்கு இதுவரை காலமும் இருந்து வந்த கட்டுப் பாடுகள் அனைத்தும் நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்டு மேற்படி விடயம் குறித்தும், இக்கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளமையால் வெளிநாடுகளில் இருந்து வடபகுதிக்கு வரும் தமிழ் உற வுகள் பெரிதும் சிரமப்படுவதாக வும் எடுத்து விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து ஜனா திபதி மேற்படி கட்டுப்பாடு களை முற்றாக அகற்றுவதற்கு உடனடியான உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு கிடைத்த மேற்படி அவசர உத் தரவின்படி இத்தடைகள் அனைத்தும் நேற்று முதல் முற்றாக நீக்கப்பட்டிருக்கிறது.

இனிமேல் வெளிநாடுகளில் இருந்துவரும் எவரும் எந்த விதக் கட்டுப்பாடுகளும் இன்றி வடபகுதிக்குச் சென்று திரும்ப முடியும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் இருந்து இனிவரும் வாரங்களில் கோடை கால விடுமுறையைக் கழிப்பதற்காகப் பெருமளவு தமிழ்

(15ஆம் பக்கம் பார்க்க)



## நெருக்கமடையும் அமெரிக்க உறவு



இலங்கையுடன் அமெரிக்க அரசாங்கம் பேணிவரும் உறவு களில் எவ்விதப் பாதிப்புகளும் ஏற்படமாட்டாது. புரிந்துணர் வுகள் நாளுக்கு நாள் அதிக ரித்து வருகிறது என இலங் கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெட்ரிசியா புட்டினாஸ் தெரி வித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் அட்டை விநியோகம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களுக் குரிய வாக்காளர் அட்டைகள் நாளை அந்தந்தப் பகுதி தபால் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

யாழ்., கிளிநொச்சி மாவட்டங் களில் நடைபெறவுள்ள இவ் உள்ளூராட்சித் தேர்தல்களில் நான்கு இலட்சத்து 35 ஆயிரத்து 557 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் தபால் மூல வாக்காளர் தவிர்ந்த ஏனைய வாக்காளரது வாக்காளர் அட்டை களே இவ்வாறு விநியோகிக கப்படவுள்ளதாகவும் அவ் அலு வலகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி நடை பெறவுள்ள இவ் உள்ளூராட்சித் தேர்தல் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.00 மணியு டன் முடிவடையவுள்ளதாக தேர் தல் ஆணையாளர் மகிந்த தேசப பிரிய தெரிவித்துள்ளார். (பா)

## பனை வெல்ல உற்பத்தி வேலணையில் ஆரம்பம்

(வேலணை)

வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கடந்த 20 வருடங்களுக் குப் பின் பனை வெல்ல உற்பத் தியில் ஈடுபட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்தங்களினால் பல் வேறு இடம்பெயர்வுகளையும், சொத்து இழப்புக்களையும் சந் தித்து வந்த இச்சங்கம் மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்ததை அடுத்தே வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சங்கம் பனைசார் உற்பத் திப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையத்தை ஆரம் பித்து அங்கு செய்யப்படும் உற் பத்திப் பொருட்களை விற்பனை செய்வதுடன், பதநீர் உற்பத்தி யினை மேற்கொள்ளுகின்ற அங்கத்வர்களுக்கான கொடுப் பனவையும் அதிகரித்து வழங்கி வருகிறது.

அத்துடன், தும்புத் தொழிற் சாலையில் உற்பத்தி செய்யும் உற்பத்திப் பொருட்களையும் சந்தைப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## நெல்லியடி ம.மகாவித்தியலயத்தில் புதிய கேட்போர் கூடம் திறப்பு



நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் கேட்போர் கூடம் நேற்று மாலை 6.30 மணியளவில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந் திரசிறி ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. கடந்த 7ஆண்டுகளுக்கு முன் கல்வியமைச்சின் நிதியில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு மாடிகளைக்கொண்ட இக்கட்ட டம் 1000 இற்கு மேற்பட்ட இருக்கைகளுக்கு மேற்பட்டது. புதிய கட்டடம் மற்றும் மகாவித்தியாலய வீதிக்கு கிழக்காக கட்டிடத் தொகுதி என்பவற்றுக்கு நிதியை வழங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

# படையினர் வேண்டுமென்றே பொதுமக்களைக் கொன்றனரா

## ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் வாசுதேவ



(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினர் வேண்டுமென்றே பொதுமக்களைக் கொன்றார்கள் என்பதைத் தான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சர்வதேச அமைப்புக்களை இணைத்துக்கொண்டு போர்க் குற்றம் சம்பந்தமாக விசாரணை நடத்துவது, நாட்டின் இறையாண்மைக்கும், சுதந்திரத்திற்கும் தடை எனவும் இலங்கையில் போர்க் குற்றம் செய்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் பற்றிய தகவல்களை வழங்கினால் அரசாங்கத்திற்கு அதுதொடர்பாக ஆராய்ந்து பார்க்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸ் சென்றுள்ள அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆர்.ரி. சிங்கள வானொலி சேவைக்கு வழங்கிய செவ்வியில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய இலங்கை தொடர்பான விடியோவில் படத்தில் போர்க் குற்றம் இடம்பெற்ற காலம், திகதி, இடம், என்பன குறித்து சரியான தகவல்கள் கிடைக்கவில்லை. அந்தத் தகவல் கிடைத்தால் அந்தப் பிரதேசத்திற்குப் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரியிடம் கேட்டு அவ்வாறான சம்பவம் இடம்பெற்றதா என ஆராய்ந்து பார்க்க முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உலகிலுள்ள கலைஞர்கள், நோக்கர்கள் ஆகியோர் மனித படு கொலைகளை மேற்கொள்ளப் படும் யுத்தத்தை நிராகரிக்கின்றனர்.

புலிகள் அமைப்பில் படையினரும், படையினர் அல்லாதவர்களும், பொதுமக்களும் இருந்தனர். அவர்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டதுடன் உயிரிழக்கவும் நேரிட்டது. இது வேண்டுமென செய்த காரியமல்ல. இதுதொடர்பாக பாரிய கவலை எமக்கு இருக்கிறது.

சர்வதேச அமைப்புகள் சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் குறித்து முழுநிதளவில் சுயாதீன நபர்களை நியமித்து தகவல், விபரங்களைக் கண்டறிய அரசாங்கத்தினால் விசாரணைகளை நடத்த முடியும். இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை நடத தப்பட்ட பின்னர் ஏதேனும் ஒன்றை செய்ய முடியும் எனவும் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

# பரீட்சை முடிவுகள் எப்போது கிடைக்கும்


(அளவெட்டி)

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதியாண்டுப் பரீட்சை நடைபெற்று ஒருவருடத்தை அண்மிக்கும் நிலையிலும் இது வரை முடிவுகள் வெளியாகவில்லை. இதனால் கடந்த ஒரு வருட காலமாக எதுவித வேலை வாய்ப்புக்களுக்கும் விண்ணப்பிக்க முடியாத நிலையில் உள்ளதாக மாணவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த முடிவுகள் வெளியாவதில் தாமதம் காரணமாக போரினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிரதேச மாணவர்கள் மற்றும் பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளும் தமது கல்வியைத் தொடர்ந்த மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு வேலைவாய்ப்புக்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற போதிலும் நாம் அதற்கு விண்ணப்பிக்க முடியவில்லை என அவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

# அகவை 75 இல் கால் பதித்தது தெஹிவளை மிருக காட்சிச்சாலை



(கொழும்பு)

தெஹிவளை மிருகக்காட்சிச் சாலை 75 ஆவது ஆண்டு நிறைவை நேற்றுக்கொண்டாடியது. இது 1926 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. முதலில் தனியார் ஒருவருக்குச் சொந்தமாக இருந்த மிருகக்காட்சிச் சாலையை 1936 இல் அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டது. இது தென் ஆசியாவில் சிறந்த பெரிய மிருகக்காட்சிச் சாலை. 24 ஏக்கர் பரப்பளவில் 350 வரையான உயிரினங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றது.

75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இதன் மேலதிக அபிவிருத்திக்காகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 1.2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிலையில் உள்ளக வீதிகள், சிறிய விலங்குகளைப் பராமரிக்க 3 மாடிக்கட்டிடம் நிலத்தடி நீர்த்தாங்கி, யானைகளுக்கான கூடம், ஊர்வனவற்றிற்கான புதிய பகுதி மற்றும் ஊழியர் தங்குமிடம என்பன அமைக்கப்படவுள்ளது.

# சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் சந்தேக நபருக்கு பிடியாணை உத்தரவு

(முரசுமோட்டை)

கிளிநொச்சியில் 15 வயது சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய சந்தேக நபருக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் 15 வயதுடைய சிறுமியைக் குறித்த நபர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி தாய்மையடையச் செய்துள்ளதாகக் கிளிநொச்சிப் பொலிஸாரினால் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நேற்று வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி செ.சிவகுமார் குறித்த நபருக்கு பிடியாணை பிறப்பித்துள்ளார். (110)

# மாணவர் சீருடை கிடைப்பது எப்போது?

## ஆசிரியர் சங்கம் ஆதங்கம்

(கொழும்பு)

இந்த வருடத்தின் அரை ஆண்டு காலப்பகுதி நிறைவடைந்தும் சில பாடசாலைகளில் மாணவர், மாணவிகளுக்கு இன்னும் சீருடைத் துணி வழங்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதனால் சீருடை கிடைக்காத மாணவர், மாணவிகள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மாணவர், மாணவிகள் சிலருக்கு வழங்கப்பட்டுள்ள சீருடையும் தரமற்று காணப்படுவதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டு மாணவர், மாணவிகளுக்கு வழ்ங்கப்பட வேண்டிய பாடசாலை சீருடையை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜோசப் ஸ்டாலின் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்

# தேர்த்திருவிழா

(அளவெட்டி)

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்த்திருவிழா நிகழ்வினை இணையததளம் மூலமாக நேரடி ஒலிபரப்புச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

www.alaveddy.ch என்ற இணையத்தள முகவரி ஊடாக நேரடியாகப் பார்வையிட முடியும். அளவெட்டி இசைக் கலைஞர்கள் பங்குபற்றும் பண் இசையும் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

# மஹோற்சவம்

(கொழும்பு)


கிழக்கில் அனைவராலும் பாம்புக் கோயில் என அழைக்கப்படும் பண்டாரியாவெளி ஸ்ரீ நாகதம்பிரான் (நாககட்டு) ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 01.07.2011 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 07.08.2011 அன்றைய தேசத்துப் பொங்கலுடன் நிறைவு பெறவுள்ளது.

# திருட்டு முயற்சி முறியடிப்பு முரசுமோட்டையில் களேபரம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவரது வீட்டிற்குள் நேற்று முன்தினம் இரவு நுழைந்த திருடர்கள் கொள்ளையடிக்க முற்பட்டவேளை அதைத் தடுக்க முற்பட்டபோது குறித்த வர்த்தகர் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் வணிக நிலையமொன்றை நடத்திவரும் மேற்படி வர்த்தகரது வீட்டுக்கு குறித்த தினத்தன்று இரவு 11.45 மணியளவில் உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பொருட்களை திருட முற்பட்ட சமயம் வர்த்தகர் அவர்களைத் தடுக்க முற்பட்ட போது திருடர்கள் அவரை தடியால் அடித்து தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர்.(110)



இந்து போர்ட் இராசரத்தினத்தின் பிறந்த நாள் விழாவும் நினைவுப் பேருரையும் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விழா அமைப்பாளர்கள் மற்றும் இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்களுடன்...


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை

### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள் – 2010

01. வணிக முதற் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்)
02. வணிக இரண்டாம் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்)
03. வணிக மூன்றாம் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்)
04. வணிக முதற் தேர்வு - 2010 (பழைய பாடத்திட்டம்)
05. வணிக மாணி - பகுதி - I - 2010 (பழைய பாடத்திட்டம்)
06. வணிக மாணி - பகுதி - II - 2009 & 2010 (பழைய பாடத்திட்டம்)
07. வணிக மாணி - பகுதி - III - 2009 (பழைய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100 இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100 இற்கான காசுக் கட்டளை / தபாற்கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூபா 20 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ. அளவுடைய தபால் உறையை இணைத்து, உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 19.08.2011 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

முக்கிய குறிப்பு :- மீள் பரீட்சார்த்திகள் உரிய பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்த பின்னர் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்.
04.07.2011 (C/795)

அரசியல் அதிகாரம் ஒருவனிடத்தில் இருக்கலாம். பலரிடத்தில் இருக்கலாம். இந்த ஒருவனோ, சிலரோ பொது நன்மைக்காகப் பாடு பட்டால் அரசியல் சரிவா நடக்கிறது என்று கொள்ளலாம். ஆனால் அந்த ஒருவனது அல்லது சிலரது அல்லது பலரது நன்மை மட்டும் தடைப் பட்டால் நிலைமை மோசமாகிறதென்று பொருள்.

- அரிஷ்டாட்டில்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## வௌவால்கள் பறந்து வரும்!

ஆயகலைகள் அறுபத்து நான்கில் பேச்சும் ஒரு கலையாகச் சொல்லப்படுகிறது. பேச்சில் வல்லவன் என்பதைக் குறிக்குமுகமாக அனுமனை 'சொல்லின் செல்வன்' என்கிறான் கம்பன்.

நம்மிடையேயும் பேச்சாற்றல் மிக்கவர்களை சொல்லின் செல்வர் என்றும் நாவலர் என்றும் சொல்வேந்தர், அரசர் என்றெல்லாம் குறிப்பிட்டுக் கொள்கிறோம். பேச்சு, மக்களை வசப்படுத்தும் கலையாக இருப்பதால், பேச்சில் வல்லவர்கள் பலர் இயல்பாகவே மக்களின் தலைவர்களாக உயர்ந்திருக்கின்றார்கள்,

இயேசு கிறிஸ்துவின் பிரசங்கமாகட்டும், ஏதென்ஸ் நகரத்து இளைஞர்களைத் தன் பின்னால் திரளவைத்த சோக்ரட்டீஸ் ஆகட்டும், ஷேக்ஸ்பியரின் மார்க் அன்ரனியா கட்டும், ஹிட்லர் ஆகட்டும், சேர்ச்சில் ஆகட்டும் மக்களை ஈர்த்ததில் அவர்கள் பேச்சுக்குப் பெரும் பங்குண்டு.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அண்ணாத்துரைக்குப் பின், அரசியல் என்றால் அடுக்கு மொழிப் பேச்சு என்றாகியது. குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் மேடைப்பேச்சுப் பாணியையே புதிதாக வழவமைத்தது என்று கூறவேண்டும்.

இந்த அலங்கார அடுக்கு நடைப் பேச்சுப் பாணியானது செயலுக்கும் மனதுக்கும் வெகு தூரமாகி, வெறும் பேச்சின் பத்திற்காகவே வீர முழக்கங்கள், கொள்கை விளக்கங்கள் என்றாகியது.

பேச்சில் அமெரிக்காவுக்குச் சவால் விடுவது, ஐ.நாவுக்கு சவால் விடுவது, ஏன் ஆண்டவனுக்கே சவால் விடுவது என்று அவ்வப்போது நம் காதில் கேட்டுக் கிறுகிறுத்துப் போனால் போதும் என்றானது. கேட்கும்போது உணர்ச்சியும் பொங்கவைப்பதாய் மேடை முழக்கங்கள் அமைந்தால் அதுவே திருப்தி என்று தமிழ் மக்கள் பழகிப் போனார்கள்.

அதுவே இங்கேயும் தொற்றிக்கொண்டது. இங்கேயும் சொல்லின் செல்வர்களும், நாவுக்கரசர்களும், அடலேறுகளும், அடங்காத் தமிழ்ச் சொல்லேறுகளும் தோன்றினார்கள். குறிப்பாக 77 இற்குப் பிறகு தமிழ்ச் சண்ட மாருதத்தால் தமிழர்கள் நிலத்திலிருந்து மேலே கிளப்பிவிடப்பட்டார்கள்.

ஆண்ட பரம்பரை ஆள நினைப்பதில் என்ன குறை என்பவரும், தமிழ்ப் படை வெல்வது வெளிப்படை என்பாரும், மரம் பழுத்தால் வௌவால் வாயில் ஆயுதங்களுடன் வரும் என்பாருமாக நம் காதுகள் நிறைய கேட்டுக் கேட்டு கிறுகிறுக்க வைத்தார்கள். கிறுகிறுத்தது மட்டுமல்ல, இந்த மறவர் படைக்கு மற்றெல்லோரும் தூசு என்று நினைக்கவும் யதார்த்தம் மறந்து மிதக்கவும் செய்தது பேச்சு. நாகாக்க மறந்ததில் சோகாக்க நேர்ந்தது பின்னர்.

இன்றும் நம்மை வெறும் பேச்சுக்களால் மயக்கிவிட முடியும். வௌவால்கள் இனியும் பறந்துவரும்; எதிரிகளிடமிருந்து எதையோ பறித்துத் தரும் என்று இன்றைக்குக் கூட யாராவது பேசுவதைக் கேட்டு அதில் கிடைக்கும் திருப்தியே போதும் என்ற மனமே பலருக்கு!

அதனால்தான் இன்றும்கூட, "தமிழருக்குத் தீர்வு தர அரசாங்கம் மறுத்தால் போராட்டம் வெழக்கும்" என்ற நகைச் சுவைகளை எல்லாம், நம்ப ஆளிருப்பதாக நினைத்துப் பேச முடிகிறது சிலருக்கு!

வாய்ப் பேச்சில் சவால்கள் விட்டுக் கொண்டிருப்பதே, தீர்வைக் கொண்டுவந்துவிடப் போதும் என்ற அப்பாவித்தனத்தில் அரசியல் கொடிகட்டிப் பறக்கவிட முடிகிறது.

பேச்சுக் கேட்டு பேச்சுக் கேட்டு வதங்கவும் தயாரான மக்களை வளர்த்து விடுதலே தமிழரின் அரசியல் என்ற கதையை நிறுத்தாமல் கந்தறுதல் நிற்காது.

- ஆசிரியர்

# நுண்கலைப்பட்டதாரிகள் 3174 பேருக்கு இந்த மாதம் வழங்கப்படுகிறது நியமனம்

(கேகாலை)

நுண்கலைப்பட்டதாரிகள் 3174 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவிருப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். கேகாலை சென்மேரிஸ் கல்லூரியில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார். இம்மாத இறுதிக்குள் இந்தப்பட்டதாரிகளுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இவர்கள் ஆசிரிய சேவைக்குள் உள்ளவாங்கப் படுவர். இந்த நியமனங்களின் மூலம் நுண்கலை பட்டதாரிகள் எதிர்கொண்ட பிரச்சினைகள் முடிவுக்கு வந்து விடும். நுண்கலை பட்டதாரிகள் எதிர்கொண்ட பிரச்சி னைகள் குறித்து கல்வி அமைச்ச தீவிரமாக ஆராய்ந்தது. இதற்கு தீர்வு எட்டும் வகையில் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப் படுகின்றது. இதன் மூலம் பாடசாலைகளில் நிலவிய நுன்கலை சம்பந்தமான ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்றார்.

# கிளிநொச்சியில் விவசாயத்தை மேற்கொள்ள கஜபா படைப்பிரிவினர் இலவசமாக உதவி

அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் வருமானத்தை மேம்படுத்தும் முகமாக, கிளிநொச்சியை சேர்ந்த கஜபா படைப்பிரிவினர் அம் மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு இலவசமாக உதவி வருகின்றனர். 25ஆவது கஜபா படைப்பிரிவின் கட்டளைத் தள பதியின் வழிநடாத்தலின் கீழ் மேற்கொள்ளப்படும் இச் செயற்திட்டத்தின் மூலம் விவசாயம் மேற் கொள்ளப்படவுள்ள 25ஏக்கர் பயிர் செய்கை நிலங்கள் விவசாயத்திற்காக தயார்படுத்திக் கொடுக்கப்படுகின்றது.

கடந்த 20 தொடக்கம் 25 வருடங்களாக எந்த வித விவசாய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படாது இருந்த இந் நிலங்களில் தற்போது மீண்டும் பயிர்கள் பயிரிடப்படவுள்ளன.



இராணுவத்தினர் இவர்களது விவசாய நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கியது மட்டுமல்லாது, உழவு இயந்திரங் களையும் பசளைகளையும் விவசாய நடவடிக்கை களுக்கு வழங்கியுள்ள னர். மேலும் இராணுவத் தினர் இவ் விவசாய நிலங்களை பயிர் செய் கைக்கு ஏற்றவகையில் சமப்படுத்திக் கொடுத்துள்ளனர்..

# போலி நாணயத்தாள்கள்; விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(கட்டுவன்)

இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண காரியாலயத்தின் ஏற்பாட்டில் போலிநாணயத் தாள்களை இனங்காணுதல் தொடர்பாக சமுர்த்தி வங்கி சங்கங்களின் காசாளர்களுக்கான விழிப் புணர்வு கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 9ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சகல வங்கி சங்கங்களிலிருந்தும் காசாளர்களை தவறாது பங்குபற்றுவதற்கு ஆவன செய்யுமாறும் பங்கு பற்றும் உத்தியொகத்தரின் பெயர் பணிபுரியும் வங்கி சங்கம் ஆகியவற்றின் விபரங்களை அவ்வவ் வங்கிச் சங்கங்கள் மாவட்ட சமுர்த்தி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் அறிவித்துள்ளார். (22)

# மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் புனரமைப்புப் பணி துரிதகதியில்

(கட்டுவன்)

வலி.வடக்கில் மீள்குடியேற்றம் செய்யப் பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள 8 பாடசாலைகள் வடக்கின் துரித மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

குறித்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பாடசாலைக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்நிதி அவ்வவ் பாடசாலை அபிவிருத்தி சங்கத்திடம் வழங்கப்பட்டு அதனூடாக இப்புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் கொல்லன்கலட்டி சைவதமிழ்க் கலவன் பாடசாலை, மாவிட்டபுரம் தெற்கு ஜி.ரி.எம்.எஸ். மாவிட்டபுரம் வடக்கு ஜி.ரி.எம்.எஸ். வீமன்காமம் மகாவித்தியாலயம், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், பன்னாலை கனகசபை வித்தியா லயம், வலித்தூண்டல் ஆர்சி.ரி. எம்.எஸ். கீரிமலை நகுலேஸ்வரம் ஆகிய 8 பாடசாலைகளும் புனர மைக்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (22)

# கல்முனையில் திடீர் தீ கடைகள் எரிந்து நாசம்

(கல்முனை)

கல்முனை நகரில் நேற்று அதிகாலை ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக இரண்டு கடைகள் உட்பட வை.எம்.சீ.ஏ அலுவலகமும் எரிந்து சேதமாகியுள்ளன.

இதன் காரணமாக வை.எம்.சீ.ஏ. அலுவலகமும் பத்திரிகைகள், பாடசாலை புத்தகங்கள் காகிதாதிகள் விற்பனை செய்யும் கடையொன்றும் முற்றாக எரிந்து சேதமாகியுள்ளன. அத்துடன் புடவை விற்பனை நிலையமொன்றின் ஒரு பகுதியும் எரிந்துள்ளது.

தீயணைக்கும் நடவடிக்கையில் கல்முனை மாநகரசபையின் தீயணைக்கும் பிரிவு ஈடுபட்டது. இந்த தீ விபத்து மின்னொழுக்கினால் ஏற்பட்டுள்ளதென தெரிவித்த கல்முனை பொலிஸார் இந்த தீ விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொங்கல் விழாவில் இளைஞர் கோஷ்டி மோதல்

(வவுனியா)

வவுனியா - பூந்தோட்டம் ஸ்ரீலஷ்மி சமேத நரசிங்கர் ஆலய வருடாந்த பொங்கல் விழா கடந்த சனி இரவு மிகவும் விமரிசையாக நடைபெற்றது. அடியார்கள் தமது நேர்த்திகடனை தீர்க்க வவுனியா நகர் கந்தசுவாமி கோவில் ஆலயத்திலிருந்து செடி மற்றும் பறவைக் காவடிகள் சகிதம் புறப்பட்டு நகர் வீதி ஊடாக நரசிம்மர் ஆலயத்தினை சென்றடைந்தனர்.

அதிகாலை இடம்பெற்ற விசேட பொங்கல் உற்சவம் நடைபெற்றதினைத் தொடர்ந்து சுவாமி வீதி வலம் வந்தவுடன் உற்சவம் நிறைவு பெற்றது.

அதேவேளை ஆலயத்திற்கு வெளியே இளைஞர் கோஷ்டிகளுக்கிடையில் நடைபெற்ற மோதலில் இருவர் வெட்டு காயங்களுடன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். அத்தோடு இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (39)

# வன்னி கூட்டமைப்பு எம்.பிக்கள் கூட்டங்களில் பங்கேற்பதில்லை

## -அபிவிருத்தி பாதிக்கப்படுவதாக மக்கள் கவலை

(வவுனியா)

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் வைபவங்களில் .அந்த தேர்தல் தொகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு மக்களுடைய தேவைகள் குறைகளை அமைச்சர்களுடைய கவனத்திற்கு சுட்டிகாட்டி வருகின்ற வேளையில், தமிழ்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் அபிவிருத்தி திட்ட வைபவங்களுக்கு அழைப்புக்கள் அனுப்பி வைத்தாலும் கூட பங்குபற்றாமை குறித்து வன்னிப் பிரதேசத்தில் இவர்களுக்கு வாக்களித்த மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுடைய விஜயங்களில் பங்கேற்கும்போது வன்னி எம்பிக்கள் கலந்துகொள்ளாமை மக்கள் மத்தியில் கவலையினை ஏற்படுத்தியுள்ளது

# பாதசாரி கடவைகள் இடப்படாததனால் வீதியைக் கடப்போர் சிரமமடைகின்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரான்லி வீதியிலிருந்து மானிப்பாய் வீதி ஓட்டுமடம் வரையான வீதிப்பகுதி காபற் வீதியாக மாற்றப்பட்டுள்ள நிலையில் இவ் வீதிக்கான பாதசாரிகள் கடவை மஞ்சள் கோடு போடப்படாமையால் வீதியைக் கடக்கும் போது பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீதி காபற் வீதியாக மாற்றப்பட்டதன் பின்னர் பாதசாரிகள் கடவை மஞ்சள் கோடு போடப்படவேண்டிய இடங்களில் அவை போடப்படாமையால் வீதியை கடப்பதற்கு குறிப்பாக வயோதிபர்களும் மாணவர்களும் வீதியோரங்கள் நீண்ட நேரம் காத்திருக்கின்றனர். வீதிப்புனரமைப்பிற்கு பின்னர் வாகனங்களின் வேகம் அதிகரித்து காணப்படுவதால் வீதி கடப்பது பெரும் சிரமமாக உள்ளதாகவும்,

அத்துடன் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இதனைக் கருத்தில் கொண்டு பாதசாரிகள் கடவை போடப்பட்டு மக்களுக்கான போக்குவரத்தை இலகுபடுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (105)

# சாரதிகள் இன்றி தவங்கிடக்கும் தொழில் திணைக்கள வாகனங்கள்

(ஊர்காவற்துறை)

கொழும்பு தொழில் திணைக்கள தலைமைக் காரியாலயத்தால் யாழ். மாவட்டத்திலுள்ள தொழில் திணைக்களத்துக்கு 2 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன

யாழ் மாவட்டத்தில் தொழில் திணைக்களத்தின் செயற்பாடுகளை விரைவுபடுத்தும் நோக்கமாகவே இவ்வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், இதில் ஒன்று யாழ். மாவட்ட தொழில் அலுவலகத்துக்கும் மற்றொன்று வடவலய தொழில் அலுவலகத்துக்கும் என வழங்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த இரு வாகனங்களுக்குமான சாரதிகள் இதுவரை நியமிக்கப்படாததால், இவற்றினை சேவையில் ஈடுபடுத்த முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உரிய அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து சாரதிகளை நியமிக்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (27)

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை - வெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெற்று வருகிறது. இவ் உற்சவத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்கிழமை காலை 10.15 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது.

# ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் தனி இடம் பெற்றவர் பண்டிதமணி

## - பேராசிரியர் சிவலிங்கராஜா புகழாரம்

(யாழ். நிருபர்)

ஈழத்து மரபுவழித் தமிழக் கல்விப் புலமைப் பாரம்பரியத்தின் கடைசிக் கொழுந்தாக எம்மிடையே வாழ்ந்து மறைந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை பல்பரிமாண ஆளுமை கொண்டவர். அவர் ஒரு யுக புருஷன். ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் அவருக்குச் சிறப்பான ஓர் இடம் உண்டு என்று இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையின் 'நவபாரதம்' நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் போராசிரியர் சி. சிவலிங்கராஜா குறிப்பிட்டார்.

திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள பண்டிதமணி இல்லத்தில் பண்டிதை பொன். பாக்கியம் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

பண்டிதமணியின் மாணவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் ஆசிரியர்களாகப் பணியாற்றியுள்ளனர். முப்பது வருட காலமாக ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றிய பண்டிதமணியைக் கடவுளாகக் கருதும் மாணாக்கர் பரம்பரை ஒன்றும் இருந்தது.

சமகால நிகழ்வைப் புராண இதிகாசக் கதைகளினூடாகச் சொல்லும் மரபு குறிப்பாகச் சிறுகதை இலக்கியத்தில் தலைகாட்டத் தொடங்கிய காலத்தில் பண்டிதமணி நவபாரதத்தினை எழுதினார்.

நவபாரதம் நூலினை பிரசித்த நொத்தாரிசு ச. தங்கமாமயிலோன் வெளியிட்டு வைக்க, முன்னாள் தனங்கிளப்பு கிராம அலுவலர் பொன்னையா நமசிவாயம் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

அதிபர் பஞ்சாட்சரம் கணேசன், வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ்,கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் நாச்சியார் செல்வநாயகம் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை செயலாளர் தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா நன்றி நவின்றார். பெருமளவான பண்டிதர்கள், தமிழறிஞர்கள், பண்டிதமணியின் மாணவர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (10)

# 75 ஆவது ஆண்டு நிறைவும் மலர் வெளியீடு விழாவும்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் முதலாவது சாரணர் அணி ஆரம்பித்த 75 ஆவது ஆண்டு நிறைவுவிழாவும் மலர் வெளியீடும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், சங்கானை பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி தம்பிராஜா பிரகாஷன் பிரதம விருந்தினராகவும், யாழ்.வலய சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் ந.கனகரத்தினம், வடமாகாண சாரண ஆணையாளர் நா.போஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் மலர் வெளியீட்டுரையை மாவட்ட சாரண ஆணையாளர் ந.இரவீந்திரன், நூல் ஆய்வுரையை யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் நாக.தமிழிந்திரன் ஆகியோர் வழங்கவுள்ளனர், நூலின் முதற்பிரதியை கல்லூரியின் பழைய மாணவனும் மகா சில்க்ஸ் புடைவையக உரிமையாளருமான து.குணநேசன் பெற்றுக்கொள்ளவுள்ளார். (44)

# கூட்டுறவுதின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 89ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு போட்டிகளை நடத்த ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

சமாசத்தின் அங்கத்துவ சங்கங்களினது அங்கத்தவர்கள், பணியாளாகள் மற்றும் மகளிர்குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கிடையே பேச்சு, கட்டுரைகளும், முன்பள்ளி மாணவர்களுக்கிடையிலான திருக்குறள் மனனப்போட்டி, குழு நடனப்போட்டி என்பனவும் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்கு பற்ற விரும்புவோர் சமாசக்காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சமாசம் அறிவித்துள்ளது.

# தலைமைத்துவ செயலமர்வு

(ஒட்டுசுட்டான்)

மாணவர்களின் தலைமைத்துவப் பண்பினை வளர்க்கும் நோக்குடன் நடத்தப்படும் தலைமைத்துவ செயலமர்வு அண்மையில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் ஒட்டுசுட்டான் கோட்டத்திற்கு உப்பட்ட கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், முத்தையன்கட்டு அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 10 மற்றும் உயர்தர மாணவர்கள் உள்ளடங்கிய 250 மாணவர்கள் பங்கு பற்றினர்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் இளைஞர்களுக்கான நாளையஅமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (42)

# சிறப்பான சமுதாயத்தை உருவாக்கும் ஆன்மீக விழிப்புணர்வு கருத்தமர்வுகள்

(ஊர்காவற்துறை)

யாழ்.குருநகர் பகுதியில் சமுதாய நன்னடத்தைகளை மேம்படுத்தும் நோக்கோடு ஆன்மீக விழிப்புணர்வுத் தொடர் கருத்தமர்வுகள் நடைபெற்று வருகின்றது.

இக்கருத்தமர்வுகள் தொடர்ந்து 3 மாதங்களுக்கு நடைபெறவுள்ளதோடு, குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் 150ஆவது ஆண்டு யூபிலி விழாவை முன்னிட்டு புனித யாகப்பர் ஆலய பங்கு மக்கள் மத்தியில் சமூக ஒற்றுமை, நன்நடத்தைகள், சகோதரத்துவம், சமத்துவம், இறைவார்த்தையின் மகிமை போன்ற தொனிப்பொருட்களை உணர்த்தும் ஆன்மீக விழிப்புணர்வு கருத்தமர்வுகள் நடைபெற்றுவருவதாக புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை வணபிதா ஆர்.எஸ்.நேசராசா அடிகளார் தெரிவித்தார்.

மேற்படி கருத்தமர்வுகளில் தினமும் 10இற்கு மேற்பட்ட இறைதியான ஆன்மீகக் குருக்கள் பங்குபற்றி மக்கள் மத்தியில் குழுவாக விழிப்புணர்வுக் கருத்தமர்வுகளை நடத்திவருவதோடு கிறிஸ்தவ குடும்பங்கள் வலயங்களாக பிரிக்கப்பட்டு இக்கருத்தமர்வுகளில் பங்குபற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கருத்தமர்வுகள் ஒரு சிறப்பான சமுதாயத்தை உருவாக்குதல் இறைவார்த்தைகள் மூலம் மக்கள் மத்தியில் ஆன்மீகத்தை புதுப்பித்தல் என்ற நோக்கத்தோடு நடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (27)





கிளிநொச்சி - அக்கராயன் குளத்தின் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு மங்கள விளக்கினை ஏற்றி வைப்பதனையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் காணலாம். (121)

# முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்

## பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வாழும் பெரும்பான்மையான தமிழ் மக்கள் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம் மக்களுக்குத் தேவையான உதவிகளை நிறைவேற்றிக் கொடுக்க வேணடும் என்று சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச் சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

யாழ்.ஜின்னா மைதானத்தில் எம்.ஏ.ஸி. மூபன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற அல் ஹதீஜா பாலர் பாடசாலையின் விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

இடம்பெயர்ந்துள்ள அனைத்து மக்களும் தத்தமது சொந்த இடங்களுக்கு மீள்குடியேறி அடிப்படை வசதிகளுடன் வாழவேண்டும் என்பதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முக்கிய குறிக்கோளாகும். இதற்காக அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் வாழும் முஸலிம் மக்களுடன் உரையாடியதிலிருந்து இந்த மக்கள் பல்வேறு பிரச்சினைகளுடன் வாழ்கின்றனர். இது தொடர்பாக நான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர், பிரதேச செயலர், ஆளுநர் ஆகியோருடன் கலந்துரையாடி, பிரசசினைகளுக்குத் தீர்வு எட்டப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்பின்னர் அமைச்சர் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டு, சேதமுற்றுள்ள மாடிக்கட்டடங்களை பார்வையிட்டதுடன், யாழ்.முஸ்லிம்களுக்குரிய ஒரேயொரு கல்லூரியான இக்கல்லூரியை கட்டியெழுப்பி, மீளக்குடியேறியுள்ள மாணவர்களுக்கு சிறந்த கல்வி வழங்கப்பட வேண்டும் என அவர் கல்விச் சமூகத்திடம் தெரிவித்தார்.

மேலும் இப்பாடசாலையில் இயங்கிவரும் மாதர்களுக்கான தையல் பயிற்சி நிலையத்தையும் பார்வையிட்டதுடன், குறைபாடுகளைக் கேட்டறிந்த அமைச்சர் உடனடியாக 7 தையல் இயந்திரங்களை வழங்குவதாகவும் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும் அவர் உறுதியளித்தார். (105)

## பஸ்கட்டணம் 2 ரூபாவால் அதிகரிப்பு; சில்லறைக் காசின்றி பயணிகள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

பஸ் கட்டணம் இரண்டு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டதை அடுத்து மண்டைதீவிற்குச் செல்லும் பயணிகள் அண்மை நாட்களாக சிரமங்களை எதிர்நோக்கியதை அவதானிக்க முடிந்தது.

ஏற்கனவே மண்டைதீவுக்கு பஸ் கட்டணமாக 20 ரூபா இலங்கைப் போக்குவரத்துச் சேவை பஸ்வண்டிகளில் அறவிடப்பட்டது. தற்சமயம் இக்கட்டணத்தில் அதிகரிப்புச் செய்யப்பட்டதற் கிணங்க இரண்டு ரூபா கூடுதலாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் பயணிகள் இரண்டு ரூபா சில்லறை எடுத்துச் செல்லாததின் காரணமாக பஸ் நடத்துநர்களுக்கும், பயணிக்குமிடையில் சிரமங்கள் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

இருந்தும், இந்நிலை இனி வரும் காலங்களில் சரி வரும் என்றும் பயணி ஒருவர் தெரிவித்துக் கொண்டதையும் அவதானிக்க முடிந்தது. (பா)

## ஓய்வூதியக் கொடுப்பனவு 12 வீதமாக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு வழங்கி வரும் ஓய்வூதியத்தை 11 வீதத்திலிருந்து 12 வீதமாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

89 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு இவ் ஓய்வூதிய அதிகரிப்பை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்தவுள்ளது. இந்த ஓய்வூதிய அதிகரிப்பின் மூலம் சுமார் 150 இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் பயன் பெறவுள்ளனர்.

இதேவேளை சமாசம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தி வரும் விபத்து ஓய்வூதிய நலத்திட்ட நடைமுறை விதியில் திருத்தம் செய்து, தொழில் செய்யும்போது ஏற்படும் விபத்து மரணத்துடன் ஏறுவகையில் அகாலமரணத்தை தழுவிக்கொள்ளும் அங்கத்தவர்களுக்கு அவரால் நியமிக்கப்பட்ட பின் உரித்தாளிக்கு வழங்கப்படுவதற்கும் வழிவகுக்கப்பட்டுள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

## வீதி விபத்தில் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பகுதியில் சவாரி ரக மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோட்டார் கார் ஒன்றும் விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்ததுடன் அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது.

நேற்றுக்காலை 8.15 மணியளவில் நடைபெற்ற இவ்விபத்தில் மல்லாகத்தைச் சேர்ந்த ஏ.துஷ்யந்தன் (வயது-40) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது வலதுகால் முழங்கால் பகுதியில் முறிவு ஏற்பட்டுள்ளதாக யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித் ஸ்ரீதன. (பா)

## பழைய இரும்புகளைத் தேடி அலைந்து திரியும் வியாபாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து தென் பகுதிக்கு பழைய இரும்பு ஏற்றுமதி அனுமதி வழங்கல் ஆரம்பித்திருப் ப தனை அடுத்து பெருமளவு இரும்பு வியாபாரிகள் பழைய இரும்புப்பொருட் களை கொள்வனவு நடவடிக்கையின் நிமித்தம் யாழ். குடாநாட்டில் பல்வேறு பகுதிகளுக்கும் படையெடுப்பதை அவ தானிக்க முடிந்தது.

ஏற்கனவே இவ்வாறு இரும்பு வியாபாரிகளினால் கொள்வனவு செய்யப் பட்ட பழைய இரும்புப் பொருட்கள் தென்பகுதிக்கு எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டிருந்தது.

இதனால் இரும்பு வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் பெருமளவு கஷ்ட நிலையினை எதிர்நோக்கி வந்தனர்.

இதனால் யாழ். ஐந்து சந்தி மற்றும் யாழ். முஸ்லிம் பகுதிகளில் பழைய இரும்புப் பொருட்கள் பெருமளவில் தேங்கிப்போயிருந்தது.

இதன் காரணமாக பழைய இரும்பு வியாபாரிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ்.அரச அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு தமது வாழ்வாதார தொழிலாகிய பழைய இரும்பு ஏற்றுமதியை தென் பகுதிக்கு மேற்கொள்ள ஆவன செய்யும்படி கோரியிருந்தனர். இதற்கமைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியினால் பழைய இரும்புகளை தென்பகுதிக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)


## ஆண்டு நிறைவு விழா

(ஆனைக்கோட்டை)

யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 34 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி மேற்படி நிறுவனத்தால் வலுவிழந்தோருக்கிடையில் பல்வேறு போட்டிகளும் கலை நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளது.

இதில் முச்சக்கர வண்டி மற்றும் சைக்கிள் ஓட்டம் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன், செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டவர்கள் மட்டுமே இப் போட்டியில் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் சேர விரும்புபவர்கள் தமது கிராம அலுவலர் அல்லது சமூக சேவை உத்தியோகத்தர் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என சமூக சேவை உத்தியோகத்தரினால அறிவிக்கப் பட்டுள்ளது. (104)



வடமாகாண தமிழ்த்தினப் போட்டியின் முஸ்லிம் நிகழ்ச்சியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம்பெற்ற மாணவிகள் பெற்ற சான்றிதழ்களையும் வெற்றிக் கேடயத்தையும் பொறுப்பாசிரியை திருமதி கவிதா ஜெயசீலனுக்கு மாணவர்கள் சூழ்ந்திருக்க அதிபர் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக் வழங்குவதைக் காணலாம். (105)


## மக்கள் வங்கிக்கு மனதார வாழ்த்து

பொன் விழா 2011



### வடமாகாண முகாமையாளர் சிறிதரனின் வாழ்த்துச் செய்தி

இலங்கையின் கிராமிய பொருளாதாரத்துடன் இரண்டறக் கலந்த தனது ஏற்றமிகு சேவையில் 50 ஆண்டுகளை நிறைவு செய்து பொன்விழாக் காணும் பெருமைமிகு இத்தருணத்தில் மக்கள் வங்கிக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

இலங்கையின் வங்கித்துறை வரலாற்றில் மக்கள் வங்கி தனக்கென ஒரு தனி இடத்தைப் பதித்து நகரங்கள், கிராமங்கள் எனச் சகல இடங்களிலும் மக்களுக்கு அளப்பெரிய நிதியியல் துறைசார்ந்த சேவைகளை வழங்கி வருகிறது என்பதை யாவரும் அறிவர். இதனால்தான் என்னவோ மக்கள் மனமறிந்த வங்கி என்ற வாசகத்தைக் கேட்டவுடன் அது மக்கள் வங்கி என முடிக்கத் தோன்றுகிறது. குறிப்பிட்ட தசாப்தங்களுக்கு முன்னர் வங்கித் துறையின் சேவை நகர்ப்புறங்களிலுள்ள மேல்தட்டு மக்களுக்கு என காணப்பட்டிருந்த நிலையில், வங்கிச் சேவையினை சாதாரண மக்களுக்கும் கிடைக்கத்தக்க வகையில் கிராமங்கள் தோறும் கிளைகளை அமைத்துக் கிராமிய மக்களிடத்து வங்கிச் சேவையினைச் சென்று சேர்த்த பெருமை மக்கள் வங்கியையே சாரும் என்றால் அது மிகையாகாது.

விவசாயம், கால்நடைவளர்ப்பு, மீன்பிடி, குடிசைக் கைத்தொழில் என்கின்ற கிராமிய பொருளாதாரம் சார்ந்த வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு மக்கள் வங்கி வழங்கி வருகின்ற சேவை என்றும் நினைவு கூரத்தக்க ஒன்றாகும். போர் முடிவடைந்த பின்னர், இன்று வடபகுதியை நோக்கிப் பெருமளவான வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் சேவையாற்ற வந்துள்ளன. ஆனால் அன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் மக்களோடு மக்களாக நின்று பல்வேறு நிதிச் சேவைகளையும் வழங்கிய மக்கள் வங்கியினுடைய சேவை போற்றுதற்குரிய ஒன்றாகும். இன்றும்கூட வடபகுதியினுடைய பொருளாதார அபிவிருத்திக்காக பல்வேறு கடன் திட்டங்களையும் வழங்குவதில் மக்கள் வங்கி காட்டுகின்ற ஆர்வம் உண்மையிலேயே பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மக்கள் வங்கி தனது ஏற்றமிகு சேவையினை மக்களுக்கு வழங்கி, பல்லாண்டு பல்லாண்டு பலநூறு ஆண்டு வெற்றிகரமாக நடைபோட வேண்டுமென எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இ.சிறிதரன்**
**வடமாகாண முகாமையாளர்**
**இலங்கை மத்திய வங்கி**

### முன்னாள் துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



சொல்லும் செயலும் ஒன்றாய் இசைந்த நிறுவமைப்புகள் மக்கள் மனங்களில் இடம்பிடிக்கின்றன. இந்த வகையில் மக்கள மனமறிந்த வங்கி என்ற மகுட வாசகத்தின் பொருளாகி இன்று தன் பொன் விழாப் பெருமையினைக் கொண்டாடும் மக்கள் வங்கியை வாழ்த்தும் இந்த வேளை அர்த்தமுள்ளது. மக்கள் வங்கியின் தனித்துவம் அதன் வரலாற்று ஊற்றுக்களில் பொதிந்துள்ளது. அன்றைய கூட்டுறவு வங்கியன் படிமலர்ச்சியாய் இன்றுவரை அதன் செயற்திட்டங்களை வழிப்படுத்தும் சமுதாய உணர்திறன், ஆடம்பரம் இல்லாத அர்ப்பணிப்பு என்பன மக்கள் வங்கியின் பொன்விழா பெருமிதத்தின் அடிப்படைகள் என்றால் மிகையில்லை. சூழமைவின் நெருக்கடியான பொழுதுகளில் மக்கள் துணைக்கரமாய் விளங்குவதுடன் பொருளியல் நோக்கு போன்ற ஆக்கங்களின் வழி சமுதாய அறிவெல்லைகளை விரிவாக்குகின்றமை, சமூகப் பணிகளின் பங்காளர்களாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

சமூக - பண்பாட்டு உணர்திறனுடன், எல்லோர்க்கும் வாழ்வு என்ற உன்னதத்தை நோக்கி, மக்கள் வங்கியின் பணிகள் நிறைந்திட எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துகள்.

**பேராசிரியர் என்.சண்முகலிங்கன்,**
**சமூகவியல் பேராசிரியர் - முன்னாள் துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(C/794)

# தேசியமட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி வெற்றியீட்டிய வீரர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவலர் மணிமண்டபத்தில் நேற்று நடைபெற்ற தேசியமட்ட கூடைப் பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து கௌரவித்ததுடன், வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்குவிப்புப் பணமும் வழங்கினார்.

37ஆவது தேசியமட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடம்பெற்ற பெண்கள் அணியினரையும், சிரேஷ்ட தேசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி தரம் இரண்டில் மூன்றாம் இடம்பெற்ற ஆண்கள் அணியினரையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

வீர, வீராங்கனைகள் பாண்ட் வாத்திய இசையுடன் நிகழ்விற்கு அழைத்துவரப்பட்டதுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் எஸ்.ரமணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வடமகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி ரூபசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வீர,வீராங்கனைகளுக்கான பதக்கங்களை அமைச்சர் டக்ளஸ தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் வீரர்களுக்கு அணிவித்து கௌரவித்தனர். வீரர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவான 2000 ரூபாவிற்கான காசோலைகளை நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ்மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

நேற்றைய இந்த நிகழ்வில் கௌரவிககப்பட்ட பெண்கள் அணி வீராங்கனைகள் ஆர்.சானுயா (அணித்தலைவர்), பி.ராஜசோபனா (உபதலைவர்), ஐ.ஆன்பெனாசீர், வி.சோபா, ஜே.துஷ்யந்தி, பி.கோபிகா, பி.மேரிபெனீனா, ஜே.துஷாந்தினி, கே.துவாரகா, இ.வினோஜா, ஆர்.சரசுதா, எ.விதுரா.

**ஆண்கள் அணி வீரர்கள்**

ரி.சிவதாஸ் (அணித்தலைவர்), எஸ். தயாளன் (உபதலைவர்), ஆர்.கண்ணா, ரட்சகன், என்.திவாகர், ஆர்.பிரசாத்மன், எஸ்.பவன், ஆர்.சுஜிந்தன், ஜே.அன்ரன், கா.நந்தன், எஸ். சசிகரன், எஸ்.ஜெகதீஸ்வரன், எஸ்.கபில் கஜன்.

## ஆசிரிய கலாசாலையில் வருடாந்த விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் வி.கே.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கான பிரதம இணைப்பாளர் திஸ்ஸ கேவவிதா மற்றும் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கான நிர்வாகப் பிரிவு பணிப்பாளர் திருமதி டபிள்யூ. பி.ஆர்.சில்வா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக கல்வி அமைச்சின் தமிழ்ப்பாடசாலைகளுக்கான அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் எஸ்.முரளிதரன், முஸ்லிம் பாடசாலைகளுக்கான அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் சற.தயூதீன், ஆசிரியர் கல்விப் பிரிவின் நிர்வாகப் பிரதிப் பணிப்பாளர் ஏ.எம்.திலகரட்ண, வடமாகாண அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் ஏ.எவ்.எம்.ரவ்பி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டி; ஸ்கந்தாவை வீழ்த்தியது விக்ரோறியா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி அகில இலங்கை ரீதியான போட்டி நிரல் கிடைக்கப்பெற்று போட்டிகள் ஆரம்பமாவது தாமதமாவதினை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலைகளின் 17 வயதுப்பிரிவு, 15 வயதுப் பிரிவு அணிகள் தம்மிடையே பயிற்சிப் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றன.


அந்த வகையில் கடந்த சனிக்கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிக்கும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணிக்கும் இடையில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அணி நான்கு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுக் கொண்டது.

இப்போட்டியின் ஆடுகளம் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக காணப்பட்டமையினால் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணி 22 ஓவர்களில் 72 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் பிரதீப் 16 ஓட்டங்களையும், ஐங்கரன் 8 ஓட்டங்களையும், சுவதரன் 7 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் விக்ரோறியா அணிசார்பில் கபிலன் 3 விக்கெட்டுக்களையும், சிவராம், பிரசாத் 2 விக்கெட்டுக்களையும், பிரதீஸ், கஜன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி அணி 19 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 75 ஓட்டங்களினைப் பெற்று 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுக் கொண்டது.

இதில் பிரசாத் 23 ஓட்டங்களையும், சிவசங்கர் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஸ்கந்தா அணியின் சுழல் பந்து வீச்சாளர் கதியோன் சிறப்பாகப் பந்து வீசி 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (42)




தேசியமட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று யாழ்.நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றது.
இதில் வீரர்கள் அழைத்து வரப்படுவதையும், வீராங்கனை ஒருவருக்கு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பதக்கம் அணிவிப்பதையும், வீரர் ஒருவருக்கு காசோலையை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் வழங்குவதையும், வீரர்கள்அமர்ந்திருப்பதையும் காணலாம்.
(படம் : பார்த்தீபன்)

## தெரிவுப் போட்டியில் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

ஏதென்ஸ் நகரில் இடம்பெறும் மாற்று வலுடையோருக்கான ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளச் சென்ற கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவன் சி.துஸ்யந்தன் நூறு மீற்றர் தெரிவுப் போட்டியில் முதலிடம் பிடித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப்போட்டியில் 12.2 செக்கனில் ஓடி முடித்தே இவர் முதலிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற 4X100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இவர் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றாரென்பதும் குறிப்பிடத்தக்கது.

## வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணம் காலிறுதியில் திருநெல்வேலி அணி வெற்றி



(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் அமரர் வீ.டி. ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்தமாக ஒன்பதாவது ஆணடாக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் நான்காவது காலிறுதிப் போட்டியில் திருநெல்வேலி அணி வல்வெட்டித்துறை ஈகிள்ஸ் அணியை 26 ஓட்டங்களால் தோற்கடித்து அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

வல்வெட்டித்துறை ஈகிள்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி அணி 49.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக கௌசிகன் 31, அருள்ராஜ் 30, ராஜ், கிரிதரன இருவரும் 20 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் கோகுலன் 5, துளசி 3, அசோக் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு 200 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வல்வெட்டித்துறை ஈகிள்ஸ் அணி 39 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 173 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால் 26 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

அந்த அணிசார்பாக முல்லை திவ்வியன் 49, அசோக் 41 ஓட்டங்களையும், ஏனையவர்கள் குறைந்தளவிலான ஓட்டங்களையும் பெற்றனர்.பந்து வீச்சில் அருள்ராஜ் 3, கோபிநாத், யசிந்தன், கௌசீகன் தலா 2, லவகாந் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற திருநெல்வேலி அணி மேலும் 5 புள்ளிகளைப் பெற்று மொத்தமாக பத்துப் புள்ளிகளுடன் முன்னிலைக்குச் சென்றுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள முதல் சுற்று ஆட்டத்தில் யாழ்.சென்றல், ஜொலிஸ் ரார் அணிகள் மோதவுள்ளன. இப்போட்டியில் வெற்றி பெறும் அணி யாழ். ஜொனியன்ஸ் அணியுடன் காலிறுதிப் போட்டியில் மோதும். இந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணி திருநெல்வேலி அரையிறுதிப் போட்டியில் மோதவுள்ளது.

## மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் தொடர் முதல் சுற்றில் மூன்று அணிகள் வெற்றி

(மட்டுவில்)

மட்டுவில் கண்ணகி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குபட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெறும் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மேற்படி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை சீமான் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டிகளில் கொடிகாமம் சதீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வரணி நண்பர்கள் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் சதீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுக் கொண்டது.

மேலும் சரசாலை யூத அணியை எதிர்த்து கைதடி குமரன் அணி மோதியது. இதில் கைதடி குமரன் அணி வெற்றிபெற்றது. இன்னுமொரு போட்டியில் மறவன்புலோ அம்பிகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சரசாலை அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில மறவன்புலோ அம்பிகை விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுக் கொண்டது. (118)

# சமன் செய்தது மகிழ்ச்சி




(பிரிட்ஜ்டவுன்)

இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியை சமன் செய்தது மகிழ்ச்சியளிப்பதாக மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் டரன் சமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: இந்தப் போட்டியில் நாங்கள் வெற்றி பெறுவதற்கு நல்ல வாய்ப்பு இருந்தது. ஆனாலும் மழையால் போட்டி சமன் ஆனதில் எங்களுக்கு எந்தவித வருத்தமும் இல்லை. எங்களின் பின்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் நீண்ட நேரம் நிலைத்து நின்று விளையாடக் கூடிய தகுதியுள்ள வீரர்களே. 3ஆவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்று தொடரை சமன்செய்ய முயற்சிப்போம். நாங்கள் முதல் இன்னிங்ஸில் ரன் குவிக்கத் தவறிவிட்டோம். இருப்பினும் எங்களின் துடுப்பாட்ட வீரர்கள் சாமுவேல்ஸ், பிராவோ ஆகியோர் சிறப்பாக விளையாடினர்.

சர்வான் மோசமாக ஆடியபோதும், அவரைப் பாராட்டிய சமி, எங்களுடைய அனுபவம் நிறைந்த துடுப்பாட்ட வீரர்கள் சர்வானும் ஒருவர். அவர் இப்போது மோசமாக ஆடி வந்தாலும், அவருக்கு நாங்கள் அனைவரும் ஆதரவாக இருப்போம் என்றார். இஷாந்த் சர்மாவைப் பாராட்டிய சமி, அவர் மிகச்சிறப்பாக பந்துவீசினார். தொடர்ந்து அவர் பவுன்சர்களை வீசி துடுப்பாட்ட வீரர்கள் நெருக்கடியை ஏற்படுத்தினார். எங்களின் பந்துவீச்சாளர்களைப் போல அவர் இந்திய அணிக்காக கடுமையாகப் போராடினார் என்றார்.

# வெற்றியைப் பறித்தது மழை



(பிரிட்ஜ்டவுன்)

மேற்கிந்தியத் தீவுகளுடனான இரண்டாவது போட்டியில் இந்திய அணி வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்பை மழை தடுத்துவிட்டதாக டோனி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாங்கள் வெற்றிபெற நல்ல வாய்ப்பு இருந்தும், மழை எங்களிடம் இருந்து வெற்றியைப் பறித்து விட்டது. மழையோ, மோசமான வானிலையோ நமது கையில் இல்லை. அதனால் நாம் ஏமாற்றம் அடைய எந்தக் காரணமும் இல்லை. 80 ஓவர்களில் 281 ரன்கள் என்பது கடினமான இலக்கு என்று நினைத்தேன். மைதானமும் ஈரப்பதமாக இருந்ததால் ரன் குவிப்பது என்பது அவ்வளவு எளிதானதல்ல என்றார்.

இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சு குறித்துப் பேசிய தோனி, அவர், சகீர்கானிடம் இருந்து பந்துவீச்சு நுணுக்கங்களை கற்றுக்கொண்டுள்ளார். அதனால் இப்போது சிறப்பாக பந்துவீசி வருகிறார். இந்தப் போட்டியில் அனைத்து வீரர்களுமே சிறப்பாக ஆடினர். இஷாந்த், லக்ஷ்மன், ராகுல் திராவிட் ஆகியோர் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது என்றார்.

# விம்பிள்டன் ரென்னிஸ் இறுதிப் போட்டி; நடாலை வீழ்த்தி ஜோகோவிச் சம்பியன்

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு சம்பியன் பட்டத்தை செர்பியாவின் நோவா ஜோகோவிச் முதல் முறையாக வென்றெடுத்தார்.

லண்டனில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதல் நிலை வீரர் ஸபெயினின் ரபெல் நடாலை வெற்றிகொண்டதன் மூலம் ஜோகோவிச இந்த வாய்ப்பினை பெற்றுக்கொண்டார்.

முதல் இரண்டு செட்களையும் 6:4, 6:1 என்ற புள்ளிகள் கணக்கில் ஜோகோவிச் கைப்பற்றிய போதிலும், மூன்றாவது செட்டை 6:1 என்ற அடிப்படையில் நடால் வெற்றெடுத்தார்.

எனினும் தீர்மானம் மிக்க இறுதிச் செட்டில் சுதாகரித்து விளையாடிய ஜோகோவிச் 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டு சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

விம்பிள்டன் பட்டத்தை முதல்முறையாக வெற்றி கொண்ட செர்பிய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ள ஜோகோவிச், இந்த ஆண்டு விளையாடிய 51 போட்டிகளில் 50 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார். இதில் நான்கு முறை இறுதிப்போட டியில் நடாலை வெற்றிகொண்டுள்ள ஜோகோவிச் ரென்னிஸ் தரப்படுத்தலில் தற்போது முதலிடத்திற்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மகளிர் உலகக்கிண்ண கால்பந்துத் தொடர் காலிறுதிக்கு முன்னேறியது அமெரிக்கா

(சின்ஷியம்)

பெண்கள் உலகக்கோப்பை கால்பந்து தொடரின் லீக் போட்டியில், அமெரிக்க அணி 3-0 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

ஜேர்மனியில் பெண்களுக்கான 6ஆவது "பிபா" உலகக்கோப்பை கால்பந்து தொடர் நடக்கிறது. இதில், பிரேசில், ஜேர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட உலகின் 16 முன்னணி அணிகள் பங்கேற்கின்றன.

நேற்று முன்தினம் நடந்த "சி" பிரிவு லீக் போட்டியில் அமெரிக்க, கொலம்பிய அணிகள் மோதின. அபாரமாக ஆடிய அமெரிக்க அணிக்கு, ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் ஹெதர் ஓரில்லி, முதல் கோல் அடித்து கைகொடுத்தார். இதற்கு கொலம்பிய வீராங்கனைகளால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இதனால் முதல் பாதி முடிவில் அமெரிக்கா 1-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியிலும் ஆதிக்கத்தைத் தொடர்ந்த அமெரிக்க அணிக்கு மேகன் ரொபினாய் (50ஆவது நிமிடம்), கார்லி லொய்ட் (57ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். கடைசி வரை போராடிய கொலம்பிய வீராங்கனைகளால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் அமெரிக்க அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன்மூலம் வடகொரிய, கொலம்பிய அணிகளை அடுத்தடுத்து வீழ்த்திய அமெரிக்க அணி காலிறுதிக்கு முன்னேறியது.

"சி" பிரிவில் நடந்த மற்றொரு லீக் போட்டியில் சுவீடன், வடகொரிய அணிகள் மோதின. ஆட்டத்தின் 64ஆவது நிமிடத்தில் லிசா தால்க்விஸ்ட் ஒரு கோல் அடித்து கைகொடுக்க, சுவீடன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஏற்கனவே கொலம்பியாவை வீழ்த்திய சுவீடன் அணி காலிறுதிக்கு முன்னேறியது.

# இந்தியாவுடனான மூன்றாவது டெஸ்ட் மேற்கிந்திய அணியிலிருந்து சர்வான் அவுட்

(பிரிஜ்டவுண்)

தொடர்ந்து மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திவரும் மேற்கிந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் ராம் நரேஷ் சர்வான், இந்திய அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சர்வானுக்குப் பதிலாக 21 வயது நிரம்பிய துடுப்பாட்ட வீரரான கிரண் பவல் அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

கடந்த ஒன்றரை வருடங்களுகளுக்குப் பின்னர் டெஸ்ட் அணிக்கு திரும்பிய சர்வான், மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றார்.

பாகிஸ்தானுடன் கடந்த மே மாதம் நடைபெற்ற இரண்டு டெஸ்ட் போட்டிகளின் நான்கு இனிங்ஸிலும் மொத்தமாக 54 ஓட்டங்களையே பெற்றிருந்தார். அதேபோன்று தற்போது நடை பெற்று வரும் இந்தியாவிற்கு எதிரான நடை பெற்று முடிந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் அவர் 29 ஓட்டங்களையே பெற்றிருந்தார்.

எனவே அவர் மீளவும் தனது திறமையை வெளிப்படுத்தும் வகையில் உள்ளூர் போட்டிகளில் தனது துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி தேசிய அணிக்குத் திரும்ப வேண்டுமென மேற்கிந்திய அணியின் தெரிவுக்குழுத் தலைவர் கிளைட் பட்ஸ் தெரிவித்தார்.

இதன்படி இந்திய அணியுடனான மூன்றாவது போட்டியில் பங்கேற்கவுள்ள மேற்கிந்திய அணி விபரம் வருமாறு- அட்ரையன் பரத், சிம்மன்ஸ், டரன் பிராவோ, சந்திரபோல், சாமுவேல்ஸ், கால்டன் போ (விக்கெட் கீப்பர்), டரன சமி (அணித் தலைவர்), பிடல் எட்வேட்ஸ், ரவி ராம்போல், பிசோ எட்வேர்ட்ஸ், மெம்ரோச், கிரண் பவல்.

# டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் துடுப்பாட்டத்தில் கலிஸ் முதலிடம்

(டுபாய்)

ஐ.சி.சி வெளியிட்டுள்ள டெஸ்ட் தர வரிசைப் பட்டியலில் துடுப்பாட்டத்தில், கலிஸ், சச்சின், சங்கக்கார முதல் மூன்று இடங்களையும் பந்து வீச்சில் ஸ்ரெய்ன், சுவான், அண்டர்சன் மூவரும் முதலிடம் பிடித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட இந்தப் பட்டியலில் துடுப்பாட்டத்தர வரிசையில் முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ள வீரர்கள் வருமாறு-

கலிஸ் (தென்னாபிரிக்கா), சச்சின் (இந்தியா), சங்கக்கார (இலங்கை), றொட் (இங்கிலாந்து), அலிஸ்ரர் குக் (இங்கிலாந்து), வி.வி.எஸ். லக்ஷ்மன் (இந்தியா), சேவாக் (இந்தியா) சமரவீர (இலங்கை), டி.வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), சந்திரபோல் (மேற்கிந்தியத் தீவுகள்).

இதேபோன்று பந்து வீச்சிலும் முதல் பத்து இடங்களைப் பிடித்த வீரர்கள் வருமாறு-

ஸ்ரெய்ன் (தென்னாபிரிக்கா), சுவான் (இங்கிலாந்து), அண்டர்சன் (இங்கிலாந்து), மோர்கல் (தென்னாபிரிக்கா), சகீர்கான் (இந்தியா), ஜோன்சன் (அவுஸ்ரேலியா), இஷாந்த் சர்மா (இந்தியா), ஹர்பஜன் சிங் (இந்தியா), சகீப் அல்ஹசன் (பங்களாதேஷ்), வெட்டோரி (நியூசிலாந்து).

## பொதுநலவாய நாடுகளின் மாநாடு 2013இல் இலங்கையில் நடைபெறும்

(கொழும்பு)

54 நாடுகள் அங்கம் வகிக்கும் பொதுநலவாய அமைப்பின் மாநாடு 2011 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெறும். இதன் தலைவரான பிரித்தானிய மகாராணியும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளார்.

பொதுநலவாய நாடுகளில் உச்சி மாநாடு அம்பாந்தோட்டையில் தற போது நிர்மாணிக்கப்பட்டு வரும் சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1976 ஆம் ஆண்டு இலங்கையில் அணிசேரா நாடுகளில் உச்சி மாநாடு நடத்தப்பட்டது. இதன் பின்னர் அதிகளவான உலக நாடுகளின் தலைவர்கள் முதலாவது மாநாடு இதுவாகும். மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

# கூட்டமைப்பு ஏற்காத தீர்வை தமிழ்மக்கள் ஏற்கமாட்டார்களாம்

## இப்படிக் கூறுகின்றார் சுமந்திரன் எம்.பி.

(கொழும்பு)

**தேசிய இனப்பிரச்சினைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏற்றுக் கொள்ளப்படாத எந்தவொரு தீர்வையும் தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் அல்ல. ஆனால் முன்னைய தேர்தல்களின் மூலம் தமிழ்மக்கள் கூட்டமைப்பின் மீதான தமது நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர்



என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏற்றுக் கொள்ளப்படாத எந்தவொரு தீர்வையும் தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

தாம் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாக இல்லாது போனாலும், தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்றும் அவர்கள் தங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் என்றும் சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

## வடக்கு, கிழக்கில் 61 நிலையங்களில் மக்களுக்கு சட்ட ஆலோசனைகள்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்களுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு தேவையான சட்ட ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படும் என இலங்கை சட்ட ஆலோசனை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சட்ட ஆலோசனை வழங்கும் நோக்கில் வடக்கு, கிழக்கில் சுமார் 61 நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளன.

ஏற்கனவே ஐந்து நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீள் குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும், மீள் குடியேற்றப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காணி உரிமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பிரதேச மக்கள் சட்ட ஆலோசனைகளை வேண்டி நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கதிர்காமர் படுகொலை சந்தேகநபர் வெளிநாட்டுக்கு தப்பியோட்டம்

## இரகசிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன கதிர்காமர் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கின் பிரதான சந்தேக நபர் வெளிநாட்டுக்குத் தப்பியோடியுள்ளதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் நிர்வாகச் செயலாளரான நடராஜா சிவராஜா அல்லது அன்பழகன் எனப்படுபவரே அவ்வாறு வெளிநாட்டுக்குத் தப்பியோடிவிட்டதாக இரகசியப் பொலிஸாரால் கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு -13, கொட்டாஞ்சேனைப் பிரதேசத்தில் வசித்து வந்த இந்தச் சந்தேக நபர், முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன கதிர்காமரைப் படுகொலை செய்வதற்கு புலி உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதை அறிந்திருந்த போதும், அது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கத் தவறினார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

ஆயினும் அவர் மீதான வழக்குத் தொடுக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸாருக்கு அறிவிக்காமல் அவர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளதாக இரகசியப் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதே நேரம் அவர் இல்லாமல் வழக்கைத் தொடர்ந்து முன்னெடுப்பதா என்பதை பரிசீலிப்பதற்காக சாட்சிகள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

# தெரிவுக் குழுவில் இணைவது குறித்து இதுவரை தீர்மானம் எடுக்கவில்லை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு யோசனையை முன்வைக்கும் நோக்கில் அரசாங்கம் அமைக்க உள்ள தெரிவுக் குழு காலத்தை வீணடிக்கும் அரசாங்கத்தின் ஏமாற்று நடவடிக்கை என்பதால், அதில் கலந்துகொள்வதா இல்லையா என்பது குறித்து எதிர்வரும் வியாக்கிழமைக்கு பின்னர் தீர்மானிக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் நடைபெறும் சர்வதேச ஜனநாயக சங்கத்தின் மாநாட்டில் கலந்துக்கொண்டுள்ளதால், அவர் நாடு திரும்பிய பின்னர்,



இது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

தெரிவுக்குழுவை அமைக்க உள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியான போதும், அரசாங்கம் அது தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தெரிவுக் குழுவை அமைத்து காலம் கடத்தாமல், உடனடியான தீர்வை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் பதவியேற்றதுடன் அரசியல் தீர்வை காண்பதற்காக சர்வக்கட்சி பிரதிநிதிகள் குழுவை நியமித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த போதிலும் அந்தக் குழுவின் அறிக்கையை இதுவரை வெளியிடவில்லை. அத்துடன் தீர்வு யோசனைகள் எதனையும் முன்வைக்கவில்லை எனவும் அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# குடாநாட்டில் 6 மாதங்களில் 30பேர் கொலையுண்டுள்ளனர்

## கொழும்பு ஆங்கில வார இதழ் தகவல்

(கொழும்பு)

கடந்த ஆறு மாதங்களில் யாழ்ப்பாணத்தில் 30 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இது போருக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கு ஒரு கெட்டசகுனம் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கொழும்பு ஆங்கில வாரஇதழில் எழுதப்பட்டுள்ள பத்தியில்,

யாழ்.குடாநாட்டின் விவசாய நகரான ஆவரங்காலில் உள்ள வீட்டில் இருந்து கடந்த மாதம் 25ஆம் திகதி தனது உந்துருளியில் 30 வயதான பாலச்சந்திரன் சற்குணநாதன் புறப்பட்டுச் சென்றிருந்தார்.

மறுநாள் காலை அந்த வீட்டில் இருந்து 2 கி.மீ தொலைவில் உள்ள புத்தூரில் விளையாட்டு மைதானத்தின் கோல் கம்பம் ஒன்றில் அவரது சடலம் தொங்கிக் கொண்டிருந்தது.

அந்தச் சடலத்தில் சித்திரவதை செய்யப்பட்டதற்கான தடயங்கள இருந்தன.

அவரது இரண்டு கைகளிலும் இருந்த நகங்கள் பிடுங்கி எடுக்கப்பட்டிருந்ததாக தனது பிரேத பரிசோதனை அறிக்கையில் சட்ட மருத்துவர் எஸ்.சிவரூபன் கூறியுள்ளார்.

நைலோன் கயிற்றால் கழுத்தில் தொங்க விடப்பட்டிருந்த அவர் தற்கொலை செய்து கொண்டதற்கான தடயங்கள் இல்லை என்றும் கூறியுள்ளார். விசாரணைகள் இன்னமும் தொடர்கின்றன.

யாழ்.குடாநாட்டில் 50ஆயிரம் படையினரும், காவல்துறையினரும் நிலைகொண்டுள்ள நிலையிலும் இதுபோன்ற சம்பவங்கள் திரும்பத் திரும்ப இடம்பெறுவது பாரிய கேள்வியை எழுப்புகிறது.

புலிகள் தோற்கடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் அங்கு இயல்புநிலை மீள உருவாக்கப்படவில்லை.

கடந்த ஆறு மாதங்களில் குறைந்தது 30 கொலைகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் நான்கு படையினரும் அடங்குவர்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் இந்த மாதம் அங்கு நடக்கவுள்ளன. அடுத்த ஆண்டு தொடக்கத்தில் வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்தநிலையில் யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் அதிகரித்து வருவது மக்கள் மத்தியில் மேலும் அச்சத்தை உருவாக்குவதுடன், குழப்ப நிலையையும் உருவாக்கும். இது ஒன்றும் இரகசியமானது அல்ல.

இது போருக்குப் பிந்திய மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கு ஒரு கெட்ட சகுனத்தை காட்டுகிறது என்று அதில கூறப்பட்டுள்ளது.

# இந்தமாத இறுதிப் பகுதியிலேயே பாகிஸ்தான் பயணமாகிறார் பீரிஸ்

(கொழும்பு)

பாகிஸ்தானுக்கு உத்தியோகபூர்வமாகச் செல்லவிருந்த வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் பயணம் இம்மாத இறுதியிலேயே இடம்பெறும் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சர் பாகிஸ்தான் செல்லவிருந்த தனது பயணத்தின் போது பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி மற்றும் பிரதமர் யூசுப் ரசா கிலானி ஆகியோரை இலங்கை வெளிவிவகார அமைச்சர் சந்தித்துப் பேச்சு நடத்து வதற்குத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் பாகிஸ்தான் அதிபர் சர்தாரி வெளிநாடு சென்றிருப்பதால் இலங்கை வெளிவிவகார அமைச்சரின் பாகிஸ்தான் பயணம் இந்தமாத பிற்பகுதிக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் அதிபரின் வெளிநாட்டுப் பயணம் குறித்த தகவல் இலங்கை அரசுக்கு கடைசி நேரத்திலேயே தெரியப்படுத்தப்பட்டதாகவும், இதனால் ஜி.எல்.பீரிசின் பாகிஸ்தான் பயணத்துக்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்ட நிலையில், அதைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சனல் -4 காணொளி பொய் என்றால் உடன் சட்டநடவடிக்கை எடுங்கள்

## அரசைக் கோருகிறார் மங்கள சமரவீர




(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்து சனல் - 4 ஒளிபரப்பிய காணொளிக் காட்சிகள் உண்மைக்குப் புறம்பானவை என்றால் அந்தத் தொலைக்காட்சிக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அகுரஸ்ஸ பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையர் என்ற வகையில் அனைவருக்கும் எதிராகவே இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதே எமது நிலைப்பாடு என்று அவர் கூறினார்.

இத்தகைய பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை என அரசாங்கம் நிரா கரிக்குமானால் நாட்டினதும், இராணுவ வீரர்களினதும், ஜனாதிபதியினதும் நற் பெயரை பாதுகாப்பதற்காக இதற்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தினார். சவேந்திர சில்வா போன்றவர்களை பயன்படுத்தி பொய் கூறுவது மாத்திரம் போதுமானதல்ல, அதனை நிரூபிப்பதற்கான சாட்சியங்கள் இருக்குமாயின் சனல் - 4 இற்கு எதிராக அரசாங்கம் வழக்குத் தொடர வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.



பேராசிரியர் தி.வேல்நம்பியின் திருக்குறளும் முகாமைத்துவமும் நூல் அறிமுகவிழா அண்மையில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெற்றபோது நூலாசிரியரும் அவரது துணைவியாரும் மங்கள விளக்கேற்றுவதையும்,

# கொழும்பை அண்டிய பகுதிகளில் ஏ.ரி.எம். பணமோசடி அதிகம்

(கொழும்பு)

ஏ.ரி.எம் மோசடி நடவடிக்கைகளின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கொழும்பை அண்டிய பிரதேசங்களில் காணப்படும் தனியார் வங்கிகளுக்கு சொந்தமான ஏ.ரி.எம். களிலேயே' இவ்வாறு சட்டவிரோதமான முறையில் பணம் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருவதாக பொலிஸார் அறிவித்துளளனர்.


பல மில்லியன் ரூபா இவ்வாறு தமது வாடிக்கையாளர்களின் வைப்புக்களிலிருந்து மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக குறித்த வங்கிகள் தெரிவித்துள்ளன.

நுட்பமான முறையில் வாடிக்கையாளர்கள் தரவுகளைப் பெற்றுக் கொண்டு இந்த மோசடி இடம்பெற்று வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் இரண்டு ரோமானியர்கள் உள்ளிட்ட கும்பலொன்று பாரிய ஏ.ரி.எம். மோசடியில் ஈடுபட்டமை கண்டு பிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தனியார் வங்கிகளில் 14 மில்லியன் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டிற்காக குறித்த ரோமானியர்கள் கைது செய் யப்பட்டிருந்தனர்.


மோசடி நடவடிக்கைகள் தொடர்பில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாக புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

நூலின் சிறப்பு பிரதிகளை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடப் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜாவிடம் இருந்து ஊரெழு கணேச வித்தியாலய அதிபர் சி.திரிகரன் மற்றும் இடைக்காடு மகா வித்தியாலய அதிபர் க.அருந்தவநேசன் பெற்றுக்கொள்வதையும் காணலாம்



# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கை இணைந்து கொள்ளாது

## நீதி அமைச்சர் ஹக்கீம் திட்டவட்டம்



(கொழும்பு)

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இணையப் போவதில்லை என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். ஆசிய - ஆபிரிக்க சட்ட ஆலோசனைப் பேரவையில் அங்கம் வகிக்கும் இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் உறுப்புரிமை பெற்றுக்கொள் ளாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிய - ஆபிரிக்க சட்ட ஆலோசனைப் பேரவையின் தலைவராக ரவூப் ஹக்கீம் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உறுப்பு நாடுகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இணைப்பது குறித்து எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இணைவதன் மூலம் குறிப்பிட்ட உறுப்பு நாடுகளின் சுயாதீன நீதித்துறைக்கு பாதிப்பு ஏற்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஆசிய ஆபிரிக்க சட்ட ஆலோசனைப் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு விளக்கம் அளிக்கும் விசேட செயலமர்வு ஒன்றினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விரைவில் மலேசியாவில் நடத்த உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சர்வதேச பயங்கரவாதம், பெண்கள் மற்றும் சிறுவர்களை கடத்துதல், சர்வதேச வர்த்தகம், வெளிநாட்டு பணியாளர்கள் தொடர்பில் ஆசிய ஆபிரிக்க சட்ட ஆலோசனைப் பேரவையில் உறுப்பு நாடுகள் முன்வைத்த யோசனைத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

# எதிர்வரும் 2020 ஆம் ஆண்டிற்குள் பத்தாயிரம் குளங்கள் நிர்மாணம்

(கொழும்பு)

ஆயிரம் குள நிர்மாண பணிகள், புதிய நீர்வள முகாமைத்துவ திட்டத்தின் கீழ் துரித கதியில் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் இந்த திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் குளங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்த திட்டத்தின் கீழ் வருடாந்தம் ஆயிரம் குளங்கள் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளன. இதற்கான 50 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இந்த வருடத்தில் மேலதிகமாக 2 லட்சம் ஏக்கர்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தவிர இந்த திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டளவில் மேலதிகமாக ஒரு லட்சம் ஹெக்டெயர்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நிர்மாணிக்கப்படும் பெரும்பாலான குளங்கள் உலர் வலயங்களான, வடக்கு, வட மத்திய, கிழக்கு, ஊவா, வயம்ப மற்றும் தென்மாகாணங்களிலேயே அமைவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பிரதேச விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு வெளிநாட்டு நிதியுதவியும் பெற்றுக்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

தாதிய தொழில் எவ்வளவு புனிதமான தொழில் தெரியுமே! போன மாதந்தான அந்தத் தொழிலைத் தொடக்கிவைச்ச நைட்டிங்கேளின்ர நினைவு நாளை சர்வதேச தாதியர் தினமாகக் கொண்டாடப்பட்டது.

பெரிய சீமாட்டியான நைட்டிங்கேள் நோயாளிகள், ஏலாதவர்களுக்குச் சேவை செய்வதிலேயே இன்பம் கண்டவர். அந்த வழியில் தோன்றிய அன்னை தெரேசா இன்னுமொருபடி மேலேபோய் உலகெலாம் புனிதத் தாயாகப் போற்றப்பட்டு வருகிறார்.

அத்தகைய புனிதமான பணியைச் செய்பவர்களில் இன்று எத்தனை பேர் அதனைச் சரியாகச் செய்கிறார்கள். இப்பொழுது உயர்பதவி வகிக்கும் அந்தத் தாதியத் தாய் என்னோட சமீபத்தில் கதைக்கேக்க சொன்னா நானும் சாதாரணத் தாதியாக இருந்து வந்தவள்தான். எனக்கு தற்போதைய தாதியப் பணியில் ஈடுபட்டிருப் போரைக் காணேக்க மிகவும் மனவேதனை அடைகிறேன் என்றா!

நோயாளருடன் தாதியர் புளங்கும் பக்குவத்திலே தான் அவர்களின் பாதி நோய் குணமடையும் என்று சொன்னா!

மேலும் அவ சொல்லேக்க தாதியருக்கான தங்குமிட வசதி யாழ்ப்பாணத்தில குறைவாக இருப்பதினால்தான் இது ஏற்படுது. சரியான ஓய்வு ஒழிச்சலில்லாட்டி ஒவ்வொருதருக்கும் 'மூட்' குழம்புந்தானே? எண்டு அவ சொன்னது ஏற்றுக்கொள்ளத்தக்க சங்கதிதான்.


ஆனா நான் செல்லவாற என்னண்டா புறநகர் பிரசவ விடுதியில வேலை செய்யிற மருத்துவமாது அங்கேயே இரவு பகலாக தங்குமடம் போட்டுக்கொண்டவ.

வசதியாக தொலைக்காட்சிப் பெட்டியும் வைத்துக்கொண்டு தங்கினா, அவ அவசரமா வயிறுநொந்து வாறவைய பாப்பா, வாட்டில தங்கி இருக்கிறவையையே பாப்பா? தொலைக்காட்சிப் பெட்டியைத்தான் பாத்துக்கொண்டிருப்பா. இதனால சங்கதி பேப்பர் வழிய வந்து அவ வீட்டுக்கனுப்பப்பட்டதுதான் மிச்சம்.

அப்பிடிச் செய்யும் தொழிலே தெய்வம் என்ற சேவையாற்றுவையால் ஏற்படுற குறைஞ்சபட்ச நிலைமையாலதான் தாதித் தொழிலுக்கு இன்றைக்கும் தனிக் கௌரவம் கிடைச்சு வருகுது.


சிலர் நோயாளிகளுடன் 'சள்புள்'ளென்று விழுந்தால் அவைக்கு என்ன மதிப்பிருக்கு? அதேவேளை நிர்வாகம் அவர்களின் அடிப்படை வசதிகளைச் செய்து குடுத்தாத்தானே அவர்களும் சீரா தொழிலைப் பாப்பினம்.

தாதிமாரின் தங்குமிட வசதிகளைச் செய்யிறண்டா யாழ்ப்பாண ஆசுப்பத்திரியில இடவசதிகள் இல்லையென சொல்லுகினம். சின்னனா ஆரம்பிச்ச ஆசுப்பத்திரி மணிக்கூட்டு வீதியையும் விழுங்கி, வேம்படிச்சந்தி, விக்டோரியா வீதி, ஆசுப்பத்திரி வீதிச் சுற்றுவட்டத்தைப் பிடிச்சிட்டுது. இன்னும் மின்சார நிலையத்தையும் உள்வாங்கப் பாத்துக்கொண்டிருக்குதாமெல்லே!



# தகவல் அறியும் உரிமைகளுக்காக ஐ.தே.க. தொடர்ந்தும் போராடும்

## விடாப்பிடியாக கரு ஜெயசூரிய



(கொழும்பு)

தகவல் பெறும் உரிமை தொடர்பான பிரேரணையைத் தொடர்ந்தும் கோரப்போவதாக ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவரும், தற்போதைய பதில் தலைவருமான கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவரினால் கடந்த மாதம் சமர்ப்பிக்கப்பட்ட இரு பிரேரணைகள் நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டன. இந்த விடயம் குறித்து அவர் மேலதிக தகவல் தருகையில, சகல பிரஜைகளுக்கும் பேச்சுரிமை இருப்பதன் காரணமாக தகவல் அறியும் உரிமையும் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். சகலரும் தகவல் அறியும் உரிமை குறித்து தாம் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற கோதாவிலும், சட்டத்தை பேணுபவர் என்ற வகையிலும் மக்களுக்கு இது குறித்த புரிந்துணர்வை மேற் கொள்ளப் போவதாக தெரிவித்துள்ளார்.

அடுத்த முறை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் இந்தப் பிரேரணையை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஏனைய எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற முயற்சிக்கப் போவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சியினர் கண்டியில் ஆர்ப்பாட்ட நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

# பயணிகளை ஏற்றிய ஹெலிகொப்டர் நடுவெளியில் தரையிறங்கியது ஏன்?

(கொழும்பு)

விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் கடந்த சனிக்கிழமை அவசரமாகத் தரையிறக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தப்படுவதாக விமானப்படை அறிவித்துள்ளது. வாடகைக்கு பெறப்பட்ட ஹெலிக்கொப்டர் ஒன்றே இவ்வாறு தரையிறக்கப்பட்டுள்ளதாக விமானப்படையின் ஊடகப் பேச்சாளர் கெப்டன் அன்ரூ விஜேசூரிய தெரிவித்தார்.

நிலாவெளியில் இருந்து புறப்பட்ட ஹெலிகொப்டரின் மின்சாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அதனை தரையிறக்க விமானி நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்புட்டார்.

இந்தக் ஹெலிகொப்டர் குருநாகல் ஹிரிப்பிட்டிய பிரதேசத்திலுள்ள விகாரையொன்றுக்குச் சொந்தமான காணியில் நேற்றுமுன்தினம் தரையிறக்கப்பட்டதாக விமானப்படை தெரிவித்துள்ளது.

பின்னர் வேறொரு ஹெலிகொப்டரைப் பயன்படுத்தி அதிலிருந்தவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்ததாக கப்டன் அன்ரூ விஜேசூரிய தெரிவித்தார்.

இவ்வாறு ஹெலிகொப்டர் அவசரமாகத் தரையிறக்க நேரிட்டமை தொடர்பில் விமானப்படையின் தொழில்நுட்ப பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஹெலிகொப்டரின் மின்சாரக் கோளாறு ஏற்படுவதற்கான காரணத்தை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகள் இதன்போது மேற்கொள்ளப்படுவதாக விமானப் படைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# மக்கள் ஜனநாயக உரிமையுடன் தேர்தலில் வாக்களிக்க முடியும்

## அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டில் கடந்த காலத்தில் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தது. இன்று இந்த நிலைமை மாறியிருக்கிறது. இந்தத் தேர்தலில் ஜனநாயக உரிமையுடன் மக்கள் வாக்களிக்கவுள்ளார்கள் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் சுதந்திரக் கட்சி காரியாலயத்தை நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரை நிகழ்த்துகையில்-

இன்று நல்லதொரு காலம் பிறந்துள்ளது. எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள. யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 19 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கு வாக்களிக்க மக்கள் தயாராகிக் கொண்டு வருகின்றார்கள்

ஜனநாயக உரிமையை பயன்படுத்தி மக்கள் இந்த தேர்தலில் வாக்களிக்கவுள்ளார்கள். இந்த நாட்டில் கடந்த காலத்தில் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு இருந்தது. இன்று இந்நிலைமை மாறியுள்ளது.

இந்த நாட்டில் வாழும் மக்கள் எந்த இடத்திற்கும் செல்லலாம், எந்த இடத்திலும் வியாபாரம் செய்யலாம் என்ற நிலைமையே தற்போது காணப்படுகின்றது.

கடந்த பல வருடங்களின் முன்னர் யாழ்ப்பாணத்தையும் தெற்கையும் இணைக்க யாழ்.தேவி புகையிரதம் ஓடியது. இன்று அது இல்லை. ஓமந்தை வரை இந்த புகையிரத சேவை தற்போது இடம் பெறுகின்றது. அதனை நாம் இன்னும் ஒன்று அல்லது ஒன்றரை வருடங்களில் மீண்டும் யாழப்பாணம் வரக் கூடியதாக செய்வோம்.

சங்குப்பிட்டிப் பாலம் போடப்பட்டதன் மூலம் ஏ-32 பாதை மக்கள் போக்குவரதத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்பட்டன. இன்று இந்த வீதிகள் எல்லாம் காபற் வீதிகளாக மாற்றப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. கொழும்பு வைத்தியசாலை எத்தகைய வசதிகளைக் கொண்டு இருக்கின்றதோ அந்தளவு வசதிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் இன்று வழங்கப்பட்டுள்ளது என்றார்.

# பெற்றோல் தரமற்றதாயின் முறைப்பாடு செய்ய முடியும்

(கொழும்பு)


பெற்றோல் பாவனையால் வாகனங்கள் பழுதடைந்தாலோ அல்லது செயலிழந்தாலோ அது தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக மூன்று தொலைபேசி இலக்கங்களை பெற்றோலிய வளத்துறை அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன்படி 0115 664 941, 0115 666 228 மற்றும் 0115 665 082 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு தங்களது முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு பெற்றோலிய வளகூட்டுதாபனத்தின் விற்பனைப் பிரிவுக்கு அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

# புலிக்கொடியை ஏந்தியவரால் லோட்ஸ் மைதானத்தில் பரபரப்பு

(கொழும்பு)



லண்டன் லோட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை புலிக் கொடியுடன் இளைஞர் ஒருவர் மைதானத்தில் ஓடியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கை- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது அனைத்துலக ஒருநாள் போட்டி லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே இளைஞர் ஒருவர் மைதானத்துக்குள் புலிக்கொடியுடன் புகுந்தார்.

அவர் மைதானத்தில் புலிக்கொடியை அசைத்தபடி சில நிமிடங்கள் அங்குமிங்கும் ஓடியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதை அவதானித்த பாதுகாப்பு அதிகாரிகள், அந்த இளைஞரை துரத்திப் பிடித்து மைதானத்தில் இருந்து வெளியே கொண்டு சென்றனர்.

# சிறுவர்களின் பாதுகாப்புக் குறித்து தாய்மாருக்கு விளக்கமளிக்க ஏற்பாடு



(கொழும்பு)

சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பில், தாய்மார்களுக்குத் தெளிவூட்டல் தொடர்பான விரைவான வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

18 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளைக் கொண்ட தாய்மார்கள் இந்த வேலைத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவித்தார்.

இதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டு, அதனூடாக பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது குறித்து தெளிவுபடுத்தப் படவுள்ளது.

அதன் ஊடாக எதிர்காலத்தில் பிள்ளைகள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளுக்கும் அவர்களே தீர்வைக் காணும் வகையில் இந்தச் செயற்றிட்டம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதிகார சபையின் தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவித்தார்.

# தென்கொரியாவில் 5000 பேருக்கு இந்த வருடம் வேலை வாய்ப்பு

(கொழும்பு)

இந்த வருடத்திற்குள் ஐயாயிரத்திற்கும் அதிகமானவர்களுக்கு தென்கொரியாவில் தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்தது.

மூவாயிரத்திற்கும் அதிகமானவர்கள் இந்த வருடத்தின் கடந்த ஆறு மாத காலப்பகுதிக்குள் தென்கொரியாவில் தொழில்புரிவதற்கான வாய்ப்பினை பெற்றுள்ளதாக பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க கூறுகிறார். அடுத்த வருடம் குறித்த தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக தென்கொரியாவில் தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் தொழில் உடன்படிக்கைகளுக்கான கையொப்பங்கள் பெறப்பட்ட பின்னர் பயிற்சி நடவடிக்கைகளை பூர்த்தி செய்து குறித்த பணியாளர்களை தென்கொரியாவுக்கு தொழிலுக்காக அனுப்புவதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஆளில்லா விமான உற்பத்தி களம் இறங்கும் பாதுகாப்புத் தரப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஆளில்லா விமானங்கள் தயாரிக்கப்பட உள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தினரும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தினரும் கூட்டாக இணைந்து குறித்த விமானம் தயாரிக்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதன் மூலம் ஆளில்லா விமானம் மற்றும் கண்ணிவெடி அகற்றும் இயந்திரம் என்பன அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

ஏற்கனவே ஆளில்லா விமானமொன்று தயாரிக்கப்பட்டு பரீட்சார்த்த முயற்சிகள் பூர்த்தியடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

அதிகளவு இராணுவத் தளபாடங்களை உற்பத்தி செய்து அவற்றை பிராந்திய வலய நாடுகளுக்கு விற்பனை செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் தென்கிழக்கு குவாண்டொங் கடற்கரைப்பகுதியில் சுமார் 55 அடி நீளமான இராட்சத கடல் வாழ் உயிரினமொன்று இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது. இந்த கடல் விலங்கானது இறந்து அழுகிய நிலையில் காணப்பட்டமையினால் அதுஎவ்வகை உயிரினம் என அடையாளம் காணப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்விலங்கின் நிறை சுமார் 4500 கிலோ கிராம்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றது. இதனை பார்வையிடுவதற்கு மக்கள் படையெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ் விலங்கினை அப்பிரதேசத்தில் உள்ள மீனவர்கள் கூட கண்டு ஆச்சரியமடைந்திருப்பதுடன், இவ்வாறானதொரு உயிரினத்தை தாம் இதுவரை கண்டதில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

## கரையொதுங்கிய இராட்சத விலங்கு



## முதுமையில் அவசியம் உடற்பயிற்சி

45 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கும், நோய்களின்றி வாழவும், எஞ்சிய காலத்தில் மற்றவர்களின் தயவின்றி சுதந்திரமாக உலாவரவும், அருகில் உள்ள ஒரு உடற்பயிற்சிக்கூடத்துக்குச்சென்று உடல் பயிற்சிகளில் ஈடுபட வேண்டியது அவசியமாகும். இவ்வாறு புதிய ஆய்வறிக்கை ஒன்றில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. முதுமையை அடைகின்ற போது இயலாமை மற்றும் நோய் வாய்ப்படல் என்பன பொதுவான அம்சங்கள். இவற்றின் காரணமாக முதுமையில் மனிதனின் சுதந்திரமும் அற்றுப்போகின்றது என்று ஆரோக்கிய உடற்பயிற்சி மற்றும் முதுமை ஆய்வு கூடம் என்ற அமைப்பின் ஆய்வாளர் கெரத் ஜோன்ஸ் கூறுகின்றார். போதிய உடல் ஆரோக்கியமின்மையே இதற்குக் காரணம். உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதன் மூலம் இது போன்ற பல பிரச் சினைகளைத் தடுக்கலாம் என்றும் அவர் ஆலோசனை தெரிவித் துள்ளார். 45 வயதுக குப்பின் முறையான உடற்பயிற்சிகள் மூலம் முதுமையில் ஏற்படும் பல பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்பது இவரின் யோசனையாகும்.





## மிதக்கும் சந்தை

தாய்லாந்தில் உள்ள Bangkok நகரத்தில் kwai நதியில் தான் இந்த உலகப்புகழ் பெற்ற மிதக்கும் சந்தை அமைந்துள்ளது. இந்த சந்தையின் நீளம் 400 மீற்றர் ஆகும். அதிகாலை முதல் நண்பகல் வரை இயங்கும் இந்த சந்தையில் பெருமளவு உணவு, பழங்கள், காய்கறிகள் மற்றும் ஞாபகார்த்த மலர்கள் விற்பனை செய்யப்படுகிறது. இந்த சந்தையை சுற்றி பார்க்க படகு ஒன்றுக்கு 300 முதல் 400 பஹாத் வரை கட்டணம் அறவிடப்படுகிறது.



## வராசு

## மூளைப் புற்றுநோய்

கடந்த 1980 ஆம் ஆண்டுகளில் இருந்து கைத்தொலைபேசிகளை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கைத்தொலைபேசிகளை அதிக அளவில் பயன்படுத்துபவர்களுக்கு மூளைபுற்றுநோய் உள்ளிட்ட நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக கூறப்பட்டது.

இதற்கிடையே சமீபத்தில் இங்கிலாந்து, அமெரிக்கா, சுவீடன் நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதுகுறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டனர். அதில் கைத்தொலைபேசிகளை அதிகம் பயன்படுத்துவதால் அதில் இருந்து வெளியாகும் கதிர்வீச்சினால் மூளைப் புற்று நோய் ஏற்படாது. அதற்கான சாத்திய கூறுகள் இல்லை என மறுப்பு தெரிவித்துள்ளனர். இந்த தகவலை சமீபத்தில் வெளியிட்டுள்ளனர். இதனால் கைத்தொலைபேசி பயன்பாட்டாளர்கள் சற்று நிம்மதி அடைந்துள்ளனர்.



ஜோர்ஜ் என்பவர் 30 இன்ச் நீளமுள்ள முள்படுக்கையில் தூங்கி அவர் மார்பகத்தின் மீது 1380 பவுண்ட்ஸ் எடையுள்ள கொன்கிரட கற்களை உடைத்து உலக சாதனை படைத்துள்ளார்.



## கொன்கிரீட் கற்களை மார்பின் மீது உடைத்து உலக சாதனை

## 'ஒன்லைன்' தமிழ் அகராதி

ஆங்கில வார்த்தைக்கு தமிழ் மொழி பெயர்ப்பு கொடுக்க பல தளங்கள் உள்ள நிலையில் தமிழ் வார்த்தைக்கு விரிவான விளக்கம் கொடுப்பதற்கு இணையவழி ஒன்லைன் தமிழ் அகராதி உதவுகிறது. அழகு கொஞ்சும் தமிழில் உள்ள வார்த்தைகளை விளங்கிக் கொள்ளாமல் பலநேரங்களில் முழித்து கொண்டு இருப்போம்.

இணையதளங்களில் தேடினாலும் இதற்கான விளக்கம் பல நேரங்களில் தெரிவதில்லை. ஆனால் இனி தமிழ் வார்தைக்கு உண்டான விளக்கத்தை எளிதாக புரியும் படி அறியலாம். நமக்கு உதவுவதற்காக ஒரு தளம் உள்ளது. தமிழ் வார்த்தைகளுக்கான விளக்கத்தை அனைவரும் நொடியில் அறிந்து கொள்ளும் பொருட்டு தமிழ் அகராதி 2004 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த தமிழ் அகராதியில் நாம் முந்தைய காலத்தில் பயன்படுத்தி வந்த அரிய தமிழ் வார்த்தைகளுக்கான விளக்கத்தை தெளிவாக தெரிந்து கொள்ளலாம். கூடவே நாம் கொடுக்கும் வார்த்தைக்கு இணையான வார்த்தையையும் காட்டுகிறது.

திருக்குறளில் கூட பல வார்த்தைகளுக்கு விளக்கத்தை தேடும் நமக்கு இத்தளம் ஒரு அரிய பொக்கிஷம்தான். தமிழ் பேராசியர்கள் மற்றும் தமிழ்துறையில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கும் இந்த தளம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இணையதள முகவரி:- http://dsal.uchicago.edu/dictionar-ies/kadirvelu/

## கணித்தை வேடிக்கையாக கற்க

கணிதம் என்றாலே வேப்பங்காயாக கசக்கிறதா, கவலை வேண்டாம் புதிய பரிமாணத்தில் கணிதத்தில் உங்களை திறமைசாலிகளாக மாற்ற வருகிறார்கள் இணைய கணினி ஆசிரியர்கள். சாதாரண பெருக்கல் கூட நமக்கு வராது என்று சொல்லும் நபர்கள் முதல் கணக்கு என்றாலே அலர்ஜி அதுவும் கூட்டல் என்றால் கூட நமக்கு கால்குலேட்டர் இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லும் அனைவருக்கும் உதவுவதற்காக ஒரு தளம் உள்ளது.

பள்ளியில் எனக்கு அறிவியல் நன்றாக வரும், ஆனால் கணக்கு மட்டும் சரியாக வராது என்று மாணவர் கூறினால் அறிவியல் சொல்லி கொடுக்கும் ஆசிரியர் திறமையை மட்டும் கொண்டு சொல்லி கொடுத்தால் நன்றாக இருக்காது. சற்று வேடிக்கையாக கூறினால் எல்லா மாணவர்களும் எளிதில் புரிந்து கொள்வார்கள். இதைப்போல் தான் கணித்தை வேடிக்கையாக மாணவர்களுக்கு சொல்லி கொடுக்கிறது இத்தளம்.

இங்கு சென்று சாதாரண பெருக்கல் கூட வித்தியாசமாக செய்ய சொல்லி கொடுக்கின்றனர். இயற்கணிதம் (Algebra), வடிவியல் (Geometry) வரை அத்தனையையும் வித்தியாசமாகவும் வேடிக்கையாகவும் அனிமேசனுடனும் சொல்லிக் கொடுக்கின்றனர். கணிதம் என்றால் அலர்ஜி என்று சொல்லும் நபர்கள் கூட இத்தளத்திற்கு சென்றால் கணிதத்தில் வல்லவர்களாகலாம் என்பது தான் இவர்கள் கொடுக்கும் தகவல்.

இணையத்தள முகவரி:- http://www.mathsisfun.com/

கணினி மூலை

# இந்திய நாட்டிற்கு எதிரானதாக இலங்கை செயற்படக்கூடிய அபாயம்

## எச்சரிக்கிறார் தமிழக முதலமைச்சர்

(சென்னை)

**இலங்கை, இந்தியாவிற்கு எதிராக செயற்படக் கூடிய அபாயம் நிலவி வருவதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.**



இலங்கை அரசாங்கம் சீனா மற்றும் பாகிஸ்தானுடன் இணைந்து இந்தியாவிற்கு எதிராக செயற்படக் கூடிய ஆபத்து காணப்படுவதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவின் முன்னணி தொலைக்காட்சி ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானைப் போன்றே சீனாவும் பல வழிகளில் இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக திகழ்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேபாளம் மற்றும் இலங்கையுடன் குறித்த இரண்டு நாடுகளும் இணைந்து கொண்டு இந்தியாவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக அழுத்தங்களை பிரயோகிக்குமாறு மத்திய அரசாங்கத்தை தொடர்ச்சியாக தாம் வலியுறுத்தப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரத் தடை விதித்தல் மற்றும் கச்சதீவை மீளப் பெற்றுக் கொள்ளல் ஆகிய தீர்மானங்கள் ஏற்கனவே இலங்கைக்கு எதிராக தமிழக சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கை அமுல்படுத்தக் கோருகிறார் ராமதாஸ்



(சென்னை)

தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு அமுல்படுத்தப்பட வேண்டும் என்று பா.ம.க நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

மதுராந்தகத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

தமிழநாடு என்று அழைப்பதை விட குடிகார நாடு என்று அழைக்கலாம். 1971 முதல் தமிழக ஆட்சியாளர்கள் 4,5 தலைமுறையினரை குடிகாரர்களாக்கிவிட்டார்கள். ஆட்சியாளர்கள் எவருக்கும் மக் கள் மீது அக்கறை இல்லை. போட்டி போட்டுக் கொண்டு இலவசங்களை வழங்குகிறார்கள்.குடிகார நாட்டில் இலவசங்கள் தேவையா? சாராயக் கடைக்குப் போகும் சமுதாயம் முன்னேறாது. பூரண மது விலக்கை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம் என்றார்.

இந்தியச் செய்திகள்

# "ராணா" வில் ரஜினியின் நடிப்பு மருத்துவரிடம் ஆலோசனை

(சென்னை)

உடல் நலக்குறைவு காரணமாக சிங்கப்பூரில் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ள நடிகர் ரஜனி ராணா படத்தில் நடிப்பது குறித்து மருத்துவர்களிடம் ஆலோசனை செய்யவுள்ளதாக அதன் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

ரஜனி மருத்துவ சிகிச்சைகளின் பின் சிங்கப்பூரில் தற்போது ஓய்வு எடுத்து வருகிறார். அவர் சென்னை திரும்பியதும் "ராணா" படப்பிடிப்பு ஆரம்பமாகவுள்ளது.

இது குறித்து அப்படத்தின் இயக்குனர் மேலும் தெரிவிக்கையில்

"ராணா" படத்தின் கதை 17ஆம் நூற்றாண்டை சேர்ந்த ஒரு அரசனை பற்றியது. ஆக்ஷன், சென்டிமென்ட், காதல் எல்லாம் இருக்கும். பெரிய போர்க்கள யுத்த காட்சி விஸ்தாரமான அரண்மனை, தர்பார் மண்டபம் போன்றவைகளும் இருக்கும். இதில் ரஜினிக்கு மூன்று வேடங்கள். ஒரு வேடம் காமெடி கேரக்டராக உருவாக்கப்பட்டு உள்ளது. படத்தில் நான்கு முதல் ஐந்து நாயகிகள் இருப்பார்கள். அதில் தீபிகா முக்கிய நாயகியாக இருப்பார். ரஜினி உடல் நிலையை கருத்தில் கொண்டு 'ராணா' கதையில் மாற்றம் செய்யவில்லை. அப்படி மாற்றுவதை ரஜினியும் விரும்பமாட்டார். இந்த கதை ரஜினியுடையது. முழு திரைக்கதையும் அவருக்கு தெரியும். படப்பிடிப்பு துவங்கியதும் ரஜினியால் எந்த அளவுக்கு சிரமம் எடுத்து நடிக்க முடியும் என்று பார்த்து அதன்படி முடிவு செய்வேன்.டாக்டர்களிடமும் ஆலோசனை செய்வேன். குதிரை மீது ரஜினி பறப்பது போன்ற காட்சி வந்தால் அந்த இடத்தில் அவருக்கு பதில் வேறு யாரை யாவது பயன்படுத்துவேன் என்று தெரிவித்துள்ளார்.

# தனித்தெலுங்கானா மாநிலத்தை வலியுறுத்தி சட்டமன்ற உறுப்பினர்கள் நால்வர் ராஜினாமா

(ஆந்திரா)

தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்க வலியுறுத்தி தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த தெலுங்கு தேசம் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் 4 பேர் தங்களது பதவியை ராஜினாமா செய்துள்ளனர்.

ஆந்திராவை பிரித்து தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்க வலியுறுத்தி தெலுங்கானா பகுதியில் போராட்டம் நடந்து வருகிறது. தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்க வலியுறுத்தி இன்று தெலுங்கானா பகுதியை சேர்ந்த காங்கிரஸ் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்யப் போவதாக அறிவித்தனர். அவர்களை சமாதானப்படுத்தும் முயற்சி நடந்து வருகிறது. ஆனால் அவர்கள் தங்களது முடிவில் உறுதியாக உள்ளனர்.

எம்.பி. க்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்து ராஜினாமா கடிதத்தை லோக் சபா சபாநாயகர் மற்றும் ராஜ்ய சபா தலைவரும் துணை ஜனாதிபதியிடமும் கொடுக்க திட்டமிட்டுள்ளனர்.

இதனையடுத்து மாநிலத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. முதல்வர் கிரண்குமார் ரெட்டி மற்றும் மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் சத்யநாராயண தெலுங்கானா பகுதியை சேர்ந்த அமைச்சர்களுடன் பேசி வருகின்றனர். கிரண்குமார் ரெட்டி, தெலுங்கானா பகுதியை சேர்ந்தவரும் துணை முதல்வருமான தாமோதர் ராஜநரஷிம்மாவுடன் ஆலோசனை நடத்தினார்.

# தமிழக நிதிநிலைக் கூட்டம்

(சென்னை)

தமிழக அரசின் முதல் நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடர் ஆகஸ்ட் 4ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதற்கான அறிவிப்பை சட்டப் பேரவைச் செயலாளர் ஏ.எம்.பி. ஜமாலுதீன் நேற்றுமுன்தினம் வெளியிட்டார். அன்றைய தினம், தமிழக அரசின் திருத்திய நிதிநிலை அறிக்கை பேரவையில் அளிக்கப்படும் என அவர் கூறியுள்ளார். தமிழக அரசின் செலவினங்களுக்குத் தேவையான நிதியை பேரவையின் அனுமதியுடனேயே ஒதுக்க வேண்டும். திமுக அரசின் ஆட்சிக் காலம் கடந்த மே மாதத்துடன் முடிவடைந்தது. அந்தக் காலம் வரை மட்டுமே அரசின் செலவுகளுக்குத் தேவையான நிதியைப் பெற பேரவையின் அனுமதி பெறப்பட்டு இருந்தது என்றார்.

# பெர்னாண்டோக்களினதும் ரட்டேமாத்தயாக்களினதும் பாத்திரங்கள்

(14ஆம் பக்கத்தொடர்ச்சி...)

யுகோஸ்லாவியா உடைந்தது அல்லது உடைக்கப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியம் சேர்பியா மீது நாட்டம் கொண்டிருந்தது. இலங்கை இருப்பது ஆசியாவில்.

பண்டைய சரித்திரப் பின்னணியைக் கொண்ட புராதன நாடு அநேகமாக பூமியில் உள்ளவற்றில் மிகத் தொன்மை வாய்ந்த ஒரு நாடு. தனித்து வமான மொழியை, குறிப்பிட்ட சமய மதப் பிரிவுகளைக் கடைப்பிடிக்கும் மற்றும் உறுதியான அடையாளத் தையும் மற்றும் மன உணர்வுகளையும் உள்ளடக்கிய மக்கள் தொகையைக் கொண்ட ஒரு தீவாக ஆசியாவில் தன்னை நிலை நிறுத்தியுள்ள அந்த நாடு முப்பது வருட கொடூரமான தற்கொலை பயங்கரவாதத்தாலும் வெளிநாட்டு தலையீடுகளாலும் அடிபட்டுள்ளது.

ஓரளவு கணிசமான மக்கள் தொகையினையும் கடுமையான ஆயுதப் படையமைப்பையும் கொண்டது அந்த நாடு. அதற்கு இவைகள் ஒரு சுமை போலத் தோன்றுமா அல்லது பழைய காலனித்துவகால பள்ளி ஆசிரியரிடம் பிரம்படி வாங்கக் குனிந்து நிற்கும் மாணவனைப் போல தண்டனை பெறுமா?

தீவிரமான முற்றுகையின் கீழ் அல்லது அப்படியான கூட்டுக் கருத்தில் ஆட்சிகளை மாற்றியமைக்கவோ மற்றும் ஊமையாக்கவோ அல்லது மேற்கு, மற்றும் நகர குடிமக்கள் சமூகம் என்பனவற்றால் பெரிதும் விரும்பப்படும் தாராண்மைவாத ஆட்சியாகவோ இடம்பெயரவைக்க முடியும். ஆனால் பரவலான அதிகாரம் கொண்ட துல்லியமான ஒன்றால் அதை உறுதியாகத் தடுக்கவும் முடியும். ஒரு சேதன அங்கமாக அநேகமாக தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒரு எதேச்சாதிகாரியால். அது நிலையற்றதாக, தவிர்க்க முடியாததாக உள்ளதா மற்றும் பிணைக்கப்பட்டதாக ஹொப்ஸின் தத்துவத்தைப் போல் கோரமாக உள்ளதா? எனக்கு அதைப்பற்றித் தெரியாது. யாராவது பாகிஸ்தானிடமோஅல்லது மியன்மாரிடமோ கேட்டுப் பாருங்கள் அல்லது உருகியிளகுதலைப் பற்றி கற்பனை செய்யுங்கள்.

இலங்கையின் நகரங்கள் பயங்கரவாத தற்கொல்லைக் குண்டுத் தாக்குதல்களால் பலமாகத் தாக்கப்பட்டுள்ளன. ஆனால் குறைந்த பட்சம் அதைக் காப்பாற்றிய தற்காக சிவில் சமூகத்துக்கு நன்றி சொல்ல வேண்டும். நாங்களாக அதைப் பாதுகாக்கவில்லை. சிங்கள விவசாயிகள் தங்கள் பையன்களை ஆயுதப் படைக்கும் கொடிய யுத்தத்துக்கும் அனுப்பியபடியால் நாங்களும் பாதுகாக்கப் பட்டோம்.

சிங்கள விவசாயிகளைக் கதாநாயகர்களாகச் சித்தரிக்கும் சிறந்த சித்திரம் 'லேனாட் வுள்'பின் பேனாவிலிருந்து 'காட்டிலுள்ள கிராமம்' எனும் கதை மூலம் வெளிவந்துள்ளது. லெஸ்டர் ஜேம்ஸ் பீரிசின் திரைப்படமான 'சிலிந்து' வில் ஜோ அபேவிகிரம மறக்க முடியாதபடி நடித்துக் காட்டியுள்ளார். மிடுக்கான பெர்னாண்டோ மற்றும் ரட்டே மாத்தயா ஆகியோரால் மெதுவான மூட நம்பிக்கையுள்ள சிலிந்து தொடர்ச்சியாகப் பின்தள்ளப்பட்டும் தூண்டப்பட்டும் களவாடப்பட்டும் வருகிறான். நீர் எருமையைப்போல செயலற்றிருந்தவன் இறுதியாக எதிரிகளின் செயல்முறைத் தூண்டலினால், தனது பிடியிலுள்ள இரட்டைக்குழல் துப்பாக்கி மூலம் ஆட்டத்தை மாற்றியமைக்கிறான்.

இப்படித்தான் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு பின்னான காலத்திலும், ஆழிப் பேரலைக்கு பின்னான கட்டமைப்பு நிர்வாகத்தின் போதும், ஒருதலைப் பட்சமான திருப்திப்படுத்தல்கள மற்றும் இடைத்தரகர்கள், ரணிலின் ஐ.தே.க.வின் இடையாட்கள் போன்றவர்களால் ஏற்படுத்தப்பட்ட தேசிய அவமானத்தின் போதும் நடைபெற்றது. சிங்கள உணர்வுகள் மற்றும் ஆன்மாக்களின் கூட்டான 'சிலிந்து' ஒளிவரை போன்ற தாக்கத்தால் அது அடுத்த கட்டத்தை அடைந்து நேராகத் தள்ளிக் கொண்டு சென்று பிரபல அமெரிக்கா சிந்தனையாளர் மிக்கே சிபிலானின் கூற்றுப்படி 'துப்பாக்கிகளின் நாளாக' நந்திக்கடலில் முடிவடைந்தது.

இன்று தருஸ்மன் அறிக்கை மற்றும் சனல் - 4னால் திரிக்கப்பட்ட நூலின் ஆர்வலர்களான குடிமக்கள் சமூகத்தின் சமூக ஊடகங்கள்தான், காலனித்துவ பிரபுக்களின் தொடர்புடைய பெர்னாண்டோக்களினதும் ரட்டேமாத்தயாக்களினதும் பாத்திரங்களின் மரபுரிமையாளர்களும் தொடர்ச்சியாளர்களும்.

இயற்பியல் விதியின்படி சிலிந்துவும் அவனது குடும்பமும் சோகமானவர்கள் என்பது உண்மை. ஆனால் எனது தந்தையாரான முப்பது வயதான மேர்வின் டீ சில்வா லேனாட் வுள்பின் நாட்குறிப்பின் அறிமுகத்தில் (1961 இல்) முடிவுக்கு வந்திருப்பது, இந்த ஏழையான சிங்கள நாட்டுப்புற கிராமவாசிகள் 'இந்த உலகத்தில் வாழும் பெர்னாண்டோக்கள் மற்றும் ரட்டே மாத்தயாக்களைக் காட்டிலும் மிக உயர்ந்த அளவுக்கு தார்மீக மதிப்பு உள்ளவர்கள்' என்று.

உலகச் செய்திகள்

# தாய்லாந்தின் முதல் பெண் பிரதமர்



(பாங்ஹொக்)

தாய்லாந்தில் எதிர்க்கட்சியான பியூதாய் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளதால் இக்கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமரின் சகோதரியுமான ஜிங்லக் புதிய பிரதமராக தேர்வு செய்யப்பட உள்ளார்.

மொத்தமுள்ள 500 இடங்களில் 260 இடங்களை பியூதாய் கட்சி கைப்பற்றியுள்ளது. ஆளும் ஜனநாயகக் கட்சிக்கு 163 இடங்கள் கிடைத்துள்ளன. எதிர்க்கட்சியான பியூதாய் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளதால் முன்னாள் பிரதமர் ஷனவத்ரேவின் சகோதரியும், இக்கட்சியின் தலைவருமான ஜிங்லக் (வயது - 44) புதிய பிரதமராக தேர்வு செய்யப்பட உள்ளார்.

தற்போதைய பிரதமர் அபிஜித் புதிய பிரதமராகவுள்ள ஜிங்லக்குக்கு தனது வாழ்த்தை தெரிவித்துள்ளார். ஜிங்லக் தாய்லாந்து நாட்டின் முதல் பெண் பிரதமராகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீன இராணுவத்தை நவீனமயப்படுத்த பட்டதாரிகளை இணைக்கத்திட்டம்

(பீஜிங்)

சீன இராணுவத்தை நவீனப்படுத்தும் நோக்கத்தில், அதிகளவில் பட்டதாரிகளைச் சேர்க்கும் வகையில் அந்நாட்டின் சட்டத்தில் விரைவில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது. உலகிலேயே அதிகளவில் 23 இலட்சம் இராணுவ வீரர்களைக் கொண்ட சீன இராணுவத்தில் சேர இதுவரை உயர்நிலைப்பள்ளி தகுதி மட்டும் கோரப்பட்டிருந்தது.

ஆனால், தற்போது, இராணுவத்தை நவீனப்படுத்தும் வகையில், அதிகளவில் பட்டதாரி சேர்க்கும் வகையில் விரைவில் திருத்தம் கொண்டுவர சீனா திட்டமிட்டுள்ளது. கடந்த 1984ஆம் ஆண்டின் இராணுவ சேவை சட்டத்தில், உயர்நிலை கல்வியை முடித்தவர்கள் இராணுவத்தில் சேவை செய்ய தகுதி பெற்றவர்கள் என்றும், 18 வயது முடிந்தவர்கள் கட்டாயமாக இராணுவத்தில் சேர வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. சீனாவின் “மக்கள் விடுதலை இராணுவம்” சமீபத்தில், அதிகளவில், உயர்நிலைக் கல்வி படிப்பு முடித்தவர்களை இராணுவத்தில் சேர்த்து வந்துள்ளது.

கடந்த 13 ஆண்டுகளில், முதன் முதலாக, இராணுவ சேவை சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது தொடர்பாக, தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழு ஆய்வு மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது. மேலும், இராணுவத்தில் சேர, வயதுத் தகுதி 24 ஆக உயர்த்தப்படுகிறது. சிறப்பு தகுதிகளுடன் இராணுவத்தில் சேர்க்கப்படும் கல்லூரி மாணவர்கள், விரைவில் உயர் பதவியை அடைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும் என்று அந்நாட்டு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

நவீனமயப்படுத்தப்பட்ட தேசிய இராணுவத்தில் பட்டதாரி இளைஞர்களை சேர்ப்பது அவசியம் என்று கடந்த மாதம், அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்திருந்தது.அதிக தொழில்நுட்பம் வாய்ந்த மற்றும் நவீன ஆயுதங்களை கையாள்வதற்கு பட்டப்படிப்பு அவசியம் என்றும், இவர்களால் எளிதில் தொழில்நுட்பங்களை புரிந்து கொண்டு கையாள முடியும் என்று அந்நாட்டு இராணுவ அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.கடந்த 2001ஆம் ஆண்டில், சிறந்த கல்லூரிகளில் இருந்து இராணுவத்தில் சேருவதற்கான மாணவர்களின் பட்டியலை சீன மக்கள் விடுதலை இராணுவம் தயாரித்தது. இதன்படி, கடந்த 2009ஆம் ஆண்டின இறுதியில் இராணுவத்தில் பணியாற்ற தயாராக இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 30 ஆயிரமாக உள்ளது.



# ஒபாமா தங்கியிருந்த இடத்துக்கு அருகே பறந்த விமானத்தால் பெரும் பரபரப்பு

(வொஷிங்டன்)


அமெரிக்க அதிபர் ஒபாமா தங்கியிருந்த இடத்துக்கு அருகே விமானமொன்று அனுமதியின்றிப்பறந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் ஒபாமா தன் வார விடு முறையை கழிப்பதற்காக மேரிலேண்ட் என்ற இடத்தில் தங்கியிருந்தார்.இந்தப் பகுதியை அமெரிக்க இராணுவத்தினர் தீவிரமாக கண் காணித்து வந்தனர். அதிபர் ஒபாமா தங்கியிருந்த இடத்துக்கு அருகே வான் பகுதியில் திடீரென ஒரு சிறிய விமானம் ஊடுருவி பறந்தது.இதைத் தொடர்ந்து இராணுவத்தின.,; அந்த விமானத்தின் விமான ஓட்டுநரை தொடர்பு கொள்ள முயற்சித்தனர். அது முடியவில்லை. இதையடுத்து அமெரிக்க இராணுவத்துக்குச் சொந்தமான ஜெட் விமானங்கள் அந்த விமானத்தை வழி மறித்தன.

அனுமதியின்றி ஊடுருவிய விமானத்தை ஹாகர்ஸ்டவுன் என்ற இடத்தில் பலவந்தமாக தரை இறக்கினர். இதுகுறித்து அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறுகையில், அந்த சிறிய விமானத்தை ஓட்டிய விமான ஓட்டுநர் வழிதவறி அனுமதியில்லாத பகுதிக்குள் ஊடுருவி விட்டதாக தெரியவந்துள்ளது. இதுகுறித்து தீவிரமாக விசாரித்து வருகிறோம் என்றனர்.

# அதிக எடையுடைய குழந்தைகளுக்கு கல்லீரல் நோய் பாதிக்கும் அபாயம்

**- பிரிட்டன் தேசிய மருத்துவ இயக்குநர் எச்சரிக்கை**



(லண்டன்)

பிரிட்டனில் அதிக எடையுடன் கூடிய ஐந்து இலட்சம் குழந்தைகள் காணப்படுகின்றனர். இவர்கள் கல்லீரல் நோயால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். பிரிட்டன் தேசிய மருத்துவ இயக்குனர் மார்ட்டின் லொம்பார்ட் இது குறித்து கூறுகையில் கல்லீரலில் கொழுப்பு சேர்ந்தால், அது கல்லீரலின் இயக்கத்தை தடுத்து விடும். கடைசியில் கல்லீரல் அரிக்கப்பட்டு மரணத்தை ஏற்படுத்தி விடும்.

ஆரம்பக் கட்டத்தில் கல்லீரல் பழுதடைந்தது தெரியவராது அது அரிக்கப்பட்ட பின் தான், கல்லீரல் பாதிக்கப்பட்ட விடயம் தெரிய வரும்.அதிகமாக மது அருந்துபவர்கள் தான் பொதுவாக கல்லீரல் பாதிப்புக்கு ஆளாகி வந்தனர். ஆனால், தற்போது அதிக எடைகொண்ட குழந்தைகளும் கல்லீரல் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். பிரிட்டனில் மட்டும் குண்டான, அதிக எடையுள்ள ஐந்து இலட்சம் குழந்தைகள் கல்லீரல் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர்.நான்கு வயது முதல் 14 வயதுள்ளவர்கள் கல்லீரல் நோயினால் பாதிப்புக்குள்ளாகி இறப்பதை பார்த்து கொண்டிருக்க, முடியாது. குழந்தைகளின் எடை அதிகரிப்பு விடயத்தில், பெற்றோர் அதிக அக்கறை செலுத்த வேண்டும். அதிக எடைகொண்ட குழந்தைகள் கல்லீரல் நோயிலிருந்து தப்பித்தாலும் பெரியவர்களான பின், அவர்கள் இந்த எடை அதிகரிப்பு காரணமாக பல்வேறு நோய்களுக்கு ஆளாக நேரிடும் எனவும் எச்சரித்தார்.



# குறள் சொல்லும் கதைகள் -48

**இன்பத்துப் பால்**

## பயம்

“நான் பிறந்தவுடன் மாமா என்னைத்தனது மகனுக்குத் திருமணம் செய்வதாக அம்மாவிடம் சொன்னாராம். நினைவு தெரிந்த நாளில் இருந்து நான் எனது மாமாவின் மகனை நாலைந்து முறை தான் சந்தித்திருப்பேன். மாமா மாதத்திற்கு இருமுறை கடிதம் போடுவார். நாங்கள் தொலை பேசிஎடுத்ததன் பின்பு மாமா இரண்டு மூன்று தினங்களுக் கொருமுறை அம்மாவோடு கதைப்பார். அவர் கதைக்கும் போது எமது திருமண விஷயம் பற்றித் தவறாது கதைப்பார் அம்மா சொல்வதால் தான் எனக்கொருவர் நிச்சயிக்கப்பட்டிருப்பதாக அறிந்து கொண்டேனே தவிர, மற்றும்படி எனக்கு எதுவும் தெரியாது. எனது மாமாவின் மகன் இதுவரை எனக்குக் கடிதம் எழுதவில்லை. தொலைபேசியில் கதைக்கவும் இல்லை. ஆரம்பத்தில் அம்மா சொன்ன எனது மாமாவின் மகனை நான் நினைத்துப் பார்ப்பேன். சிறிய வயதில் கண்ட அந்தக் குழந்தை முகம்தான் எனது நினைவுக்கு வரும். பருவ வயது ஆரம்பித்த போது மாமாவின் மகனின் நினைப்பைக் கஜேந்திரன் மறக்கச் செய்து விட்டார். அம்மாவின் விருப்பத்தை மறுக்கக் கூடா தென்பதற்காக நான் கஜேந்திரனை பல வழிகளிலும் கொடுமைப்படுத்தி விட்டேன். எனினும், என்மீது கொண்ட காதல் மாறாமல் எனது அன்புக்காக ஏங்கினார். அவர் படும் துன்பத்தைக் கண்டு மனம் இரங்கித்தான் நான் அவரைக் காதலித்தேன். தற்செயலாக நான் எனது மாமாவின் மகனைத் திருமணம் செய்தால் அவர் இறந்து விடுவார்.” விம்மி விம்மி அழுதாள் வித்தியா.

“ஏன் வீணாகக் கற்பனை செய்கிறாய். உன்னால் அவரை மறக்க முடியுமா..?” என்று கேட்டு விட்டு வித்தியாவின் முகத்தைப் பார்த்தாள் அர்ச்சகா.

“மறக்க முடியாது. ஆனால், சின்ன வயதில் அப்பா இறந்த பின்பு அம்மா என்னை வளர்க்கப் பட்ட கஷ்டத்தைச்சொல்லில் வடிக்க முடியாது. அப்படிப்பட்ட அம்மாவை ஏமாற்றுவதை நினைக்க வேதனையாக இருக்கு”.

“எல்லோரும் கஷ்டப்பட்டுத்தான் பிள்ளைகளை வளர்க்கிறார்கள். அதற்காக விரும்பிக் காதல் கொண்டவனை வெறுக்க முடியுமா? நீ வெறுத்தால் கஜேந்திரனது நிலை என்ன..? அத்துடன் விரும்பியவனை மறந்து இன்னொருவனுடன் கடைசிவரையும் நிம்மதியாக வாழ முடியாது. அவனது நினைவு தினமும் மனதை நெருடிக்கொண்டு தான் இருக்கும்” என்றாள் அர்ச்சகா.

“நான் அவரை மறந்து மாமாவின் மகனுடன் சேர்ந்து வாழ்வேன் என்று நினைக்கிறாயா..? எனது அன்புக் காதலர் எனது நெஞ்சுக்குள்ளேயே இருக்கிறார் என்று நினைத்து நான் சூடான எதையும் உண்பதில்லை. என் நெஞ்சுக்குள் இருக்கும் எனது காதலர் நான் சூடானவற்றை உண்டால் வெந்து விடுவாரோ என்ற பயத்தால்தான் நான் உண்பதில்லை. அப்படிப்பட்ட நான் அவரை மறந்து இன்னொருவரின் கரம் பற்றுவேனா..? என்று கேட்டாள் வித்தியா.

வித்தியா சொன்னதைக் கேட்டு அதிர்ந்து போனாள் அர்ச்சகா

வித்தியா இவ்வளவு தீவிரமாகக் கஜேந்திரனை விரும்புகிறாளா..? “காதல் புனிதமானது உயர்ந்தது: பெருமைமிக்கது என்றெல்லாம் சொல்லலாம். இந்த வார்த்தைகளுக்குப் பெறுமதியே இல்லை. காதலைப் பற்றி காதல் கொண்டவர்கள் உணர்ந்து அறிதல் வேண்டும்.” இப்படிக் கொழும்பில் அவளது தோழி ஒருத்தி சொல்வாள். அவள் சொல்லும் போது அர்ச்சகா வாய் வாய்விட்டுச் சிரிப்பாள். “உடலில் எழும் இச்சைகளைத் தீர்ப்பதைக் காதல் என்று சொல்கிறார்கள். இதில் என்ன புனிதம் இருக்கிறது என்று சொல்வாள் அர்ச்சகா. இன்று காதலைப் பற்றி அறிந்து கொண்டாள். இரண்டு வாரங்களுக்கு முன் கண்டு காதல் கொண்ட நகுலனை மறப்பதே இயலாத காரியமாக இருக்கும் போது, இரண்டு மூன்று வருடங்களாகக் காதலிக்கும் கஜேந்திரனை எப்படி வித்தியாவால் மறக்க முடியும் என்று நினைத்தாள் அர்ச்சகா.

முன்பென்றால்: “இதயத்துள் இருக்கும் காதலர் வெந்து விடுவார். எனக் கருதி சூடானவற்றை உண்ணவில்லை” என்று யாராவது சொன்னால் விழுந்து விழுந்து சிரித்திருப்பாள். ஆனால் இன்று: “எனது காதலரும் இதயத்துள் இருப்பதால் நானும் சூடானவற்றை உண்ணக் கூடாது” என்று நினைத்தாள் அர்ச்சகா.

**கே.வி.குணசேகரம்.**

நெஞ்சத்தார் காதலவராக வெய்து உண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து. 1128.

என் காதலர் என் நெஞ்சினுள் இருக்கிறார். ஆகையால் சூடான பொருள்களை நான் உண்டால் அவர் வெந்து விடுவார் என்று எண்ணிச் சூடான பொருள்கள் எதையும் நான் உண்பதில்லை.

# பெர்னாண்டோக்களினதும் ரட்டேமாத்தயாக்களினதும் பாத்திரங்கள்

-தயான் ஜயதிலக-

தொடர்ந்து பயங்கரவாதத்தை நிலைநிறுத்திய இயக்கமொன்று, தொடர்ந்து இரு நாடுகளைச் சேர்ந்த அரசாங்கங்கள் யுத்த நிறுத்தம் மூலமாகவும் பேச்சுவார்த்தைகள் மூலமாகவும் பல அங்கங்களை அரங்கேற்றிய பிறகும், தொடர்ச்சியாக யுத்தத்தை நோக்கியே திரும்பும் பலமாக ஆயுதம் தரித்த அந்த இயக்கம், பிரிவினை மூலம் நாட்டைத் துண்டாடுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு இறுதியில் மாட்டிக் கொண்டு ஓரங்கட்டப்பட்டு வெளியேற்றப்பட்டது.

இவ்வாறான ஒரு நிலையை எதிர்கொள்ள நேர்ந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் அல்லது தெளிவாகச் சொல்வதானால் ஒரு அரசாங்கம என்ன செய்யும்? மற்றும் அரச விவகாரங்களை தலைமையேற்று நடத்தும் ஒரு தலைவர் என்ன செய்வார்?

அப்படியான ஒரு இயக்கப் போராளிகளில் அநேகர், பொதுமக்கள் போல உடையணிந்து பொதுமக்கள் பரம்பல் உள்ள இடத்தைச் சூழ்ந்து கொண்டு, அதனுள்ளே புகுந்து கொண்டால் ஒரு அரசாங்கம் என்ன செய்யும்? அப்படியான ஆயுதக்குழுகனரகத் துப்பாக்கிகளையும் மற்றும் கட்டளை மையங்களையும் பொதுமக்கள் மத்தியில் நிறுவி, அத்தகைய துப்பாக்கிகள் மற்றும் மோர்ட்டார்கள் மூலமாக சுற்றியுள்ள இராணுவத்தினரை நோக்கி தாக்குதல் நடத்தினால் ஒரு அரசாங்கம் என்ன செய்யும்?

ஓரங்கட்டப்பட்ட அந்தப் பயங்கரவாத இயக்க இராணுவத்தின் மூலோபாயங்கள், வெளியே இருந்து தூண்டப்படும் யுத்த நிறுத்தமொன்றை ஊக்குவித்து, அதன் வழியாக மற்றொருநாள் போராடுவதற்கு வேண்டி உயிர்தப்பும் எண்ணத்தைக் கொண்டிருந்தால் ஒரு அரசாங்கம் என்ன செய்யும்? ஒரு ஜனநாயகக் குடியரசின் அரசாங்கம், அதன் பெரும்பான்மையான குடிமக்கள் பல தசாப்தங்களாக கொடிய நோயாகத் தொடரும் பயங்கரவாதத்துக்கு தீர்க்கமான முடிவொன்றைக் காணும்படி வலியுறுத்தும்போதும், மற்றும் அரசாங்கத்தையும் குடிமக்களையும் சித்திரவதைக்கு உட்படுத்தி வரும் பயங்கரவாத அரக்கனைத் தோற்கடித்து அழிப்பதற்காக ஆயுதப் படைகள் அணிவகுத்து நிற்கும் போதும் என்ன செய்யும்?

அந்த நிலைமையில் உள்ள ஒரே யதார்த்தமான தெரிவாக நிபந்தனையற்ற சரணடைவின் அடிப்படையின்றி மற்றொரு யுத்த நிறுத்தத்துக்கு சம்மதித்து மற்றொரு சுற்றுப் பேச்சு வார்த்தைக்குப் போவதா? ஆனால் அதன் விளைவாக பிரிவினைவாத பயங்கரவாதத் தலைவர் வெளியேறிவிடலாம் என்கிற ஐயப்பாடு உள்ளதே? அல்லது இரண்டாம் உலகப் போரில் மேற்கத்தைய கூட்டு முன்னணியினர் பேர்லினுக்கு வான்வழியாக நுழைந்ததைப் போல உள்நுழைவதா அல்லது ருவாண்டாவின் ஜனாதிபதி போல் காகமேயின் படைகள் எல்லைப் பகுதியில் உள்ள குடிமக்கள் வாழிடங்களுக்குள் நுழைந்ததைப்போல் உள்நுழைவதா?

நீங்கள் அப்படி உள்நுழையும் போது, மிகவும் ஆவேசத்துடன் கண்மூடித்தனமாக உள்நுழைவீர்களா, அல்லது அதேவேளை எதிரிகளின் தற்காப்புகளை உடைத்து சாத்தியமான அளவுக்கு பொதுமக்கள் . வெளி யேறுவதற்கான உதவிகளைச் செய் வதற்காக ஆபத்தான முயற்சிகளை மேற்கொள்வீர்களா?

ஒருமுறை உங்களால் முடிந்தளவுக்கு சாத்தியமான எல்லைவரையில் அப்படிச் செய்ததின் பிறகு என்ன செய்வீர்கள்? எதிரிகளின் மூர்க்கத்தனமான முயற்சிகளை, குடிமக்களின் உடைகளில் உட்புகுந்திருக்கும் தற்கொலைக் குண்டுதாரிகளின் தந்திரங்கள் உட்பட்ட முயற்சிகளை எப்படிக் கையாள்வீர்கள்?

மேலும் இறுதிப்போர் நிகழ்ந்த நேரம், தனிமையான எதிரித் தலைவனுக்கு எதிராக கெமாண்டோக்கள் நடத்திய திடீர் அறுவைச் சிகிச்சையைப் போன்றதாக இருக்கவில்லை. ஆனால், உயரடுக்குப் பாதுகாப்பைக் கொண்ட குரூரமான எதிரிகளை கொண்டிருந்தது. யுத்தம் நடத்தப்பட்டது, விமானிகள் இன்றித் தாக்கும் விமானங்களையோ அல்லது குறி வைத்துத் தாக்கும் ஏவுகணைகளைக் கொண்டோ அல்ல, அந்த யுத்தம் கால்நடையாகச் சென்ற வீரர்களால் நடத்தப்பட்டது. அநேகமாக அவர்கள் எல்லோரும் கிராமப்புறங்களிலிருந்து வந்தவர்கள். அந்தக் கிராமங்களில், நீண்டகாலப் போராட்டத்தின் வெறியாட்டங்கள் பலிவாங்கிய பச்சிளம் குழந்தைகள் மற்றும் அவர்களுக்கு பாலூட்டும் தாய்மார் போன்றவர்களின் உடல்களும் அவர்கள் நினைவுகளும், ஒரு வாழ்வாதாரத்தின் மீதான வரலாற்றுத் தவிப்புகளை மீள் எழுப்பியதின் காரணமாக இவர்களைப் படைக்கு அழைத்து வந்தது. இந்த நிலையில் கடைசிக் காட்சி அழகாக இருக்கும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? புரட்சி என்பது ஒரு இராப்போசன விருந்தல்ல என்று மாவோ சொல்லியிருக்கிறார். பிரிவினைவாதப் போர் ஒரு இராப்போசன விருந்திலும் குறைவானதல்ல.



பாகுபாடற்ற இத்தாலியர்கள், கைது செய்த பின்னர் முசோலினியையும் அவரது பெண் நண்பியையும் தூக்கிலிட்டார்கள். இலங்கை ஆயதப் படையினர் தங்களின் சக இனத்தவரும் தலைமுறையின் வீரருமான றோகண விஜேவீரவையே தீயில் இட்டனர்.

வன்முறைத் தத்துவம் எனது எண்ணமல்ல, ஆனால் எப்படியாயினும் பிடெல், சே, கியுபா நாட்டவர்கள், நிக்கராகுவேயின் சன்டினிஸ்ட்டுகள், மற்றும் அநேகமான ஆபிரிக்க விடுதலை இயக்கங்களும் அத்தத்துவங்களைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். இவைகள் வழக்கமான நடைமுறைகளுக்கும், மற்றும் உண்மையில் ஞானிகளின் செயல்களுடனும் ஒப்பிடப்பட்டுள்ளது. வரலாறு ஒரு கொலைகாரனின் மேசை என ஹெகல் வர்ணிததார். ஆகவே இனி என்ன?

ஒவ்வொரு அரசாங்கமும் மற்றும் சமூகமும் எப்படி, எப்போது மற்றும் யாரால் பொறுப்புக்கூறும் மற்றும் தண்டனை பற்றிய விடயங்களை தீர்ப்பது என்று தானே முடிவு செய்யும். அகஸ்டோ பினோச்சை வெளியேற அனுமதித்துவிட்டு, இன்னும் எந்தவித வழக்கும் தொடரப்படாமலுள்ள குருதி தோய்ந்த ஞாயிறு பற்றிய அறிக்கையை வெளியிட 38 வருடங்கள் எடுத்துக் கொண்ட ஐக்கிய இராச்சியத்தால் எப்படி தண்டனைகளைப் பற்றி இலங்கையை நோக்கி விரல் நீட்ட முடியும்?

பொறுப்புக்கூறும் கடப்பாடு மற்றும் நல்லெண்ணத்துக்குரிய முன் வேண்டுதல் மற்றும் சர்வதேச அல்லது சுதந்திரமான தேசிய விசாரணை என வாதிடுபவர்கள் அறிய வேண்டியது என்னவெனில் இலங்கை ஆயுதப்படைகளிடம் அப்படியான ஒரு விசாரணையை தீவிரமாக மேற்கொண்டால் அது நல்லெண்ணத்துக்கு உதவி செய்வதற்கு மாறாக நல்லெண்ணத்தை சிதறடிக்கவே செய்யும் என்பதை.

தற்கால உலகம் கண்கூடாகக் கண்ட மிக மோசமான போராளிக் குழுவினரிடமிருந்து நாட்டை மீட்பதற்காக தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து, மற்றும் ஊனமாகிப்போன மிகப் பெரிய ஆயுதப் படையினரை கூண்டில் ஏற்ற அனுமதி கோருபவர்களிடம் கேட்க வேண்டியது இந்த ஆயுதப் படையினருக்கு யார் நல்லெண்ணத்தை உருவாக்குவது என்று?

நகர்ப்புற சமூகம் மற்றும் அதன் நாடு கடந்த உறவினர்கள் போன்ற சக்திகள், சில வெளிநாட்டவர்களுக்காக அல்லது தாராளவாத சட்டக் கோட்பாடுகளுக்காக, தங்கள் மகன்களை கூண்டிலேற்ற விரும்புவது கண்டு கொதிப்படையும் சிங்கள விவசாயிகளிடத்து சமரசத்தை யார் ஏற்படுத்துவது? பழமையான பரந்த வெகுஜன அமைப்பைக் கொண்ட ஒரு தீவுக்கு, அதன் முன்னாள் காலனித்துவ ஆட்சியாளர்கள் இறுதிக் காலக் கெடுவை வழங்கும்போது, மற்றும் வரலாற்று காலந்தொட்டு ஊடுருவல்களை நடத்திவரும் அண்டை நிலப்பரப்பு ஒன்று இப்போது பொருளாதாரத் தடைகளை வலியுறுத்தி தீர்மானங்களை நிறைவேற்றும்போதும் அதனை யார் சரி செய்வது?

புளோரிடாவிலுள்ள கஸ்ட்ரோ எதிர்ப்பு கியுபாவாசிகளின் அழுத்தம் மற்றும் அமெரிக்காவினால் முன்னெடுககப்பட்ட பொருளாதாரத் தடைகள் என்பன கியுபாவிற்கு ஏதாவது இளகல் தன்மையை ஏற்படுத்தியதா? இப்படியான வெளிப்புற அழுத்தங்களும் அக்கிரமமான கோரிக்கைகளும், சரித்திர காலந்தொட்டே எம்மீது ஊடுருவல்களையும் ஆக்கிரமிப்புகளையும் மேற்கொண்டவர்களால் உள்நாட்டு ஐக்கியத்துக்கு வழிவகுக்காமல் எங்கே மேற்கொள்ளப்படுகின்றன? ஏனெனில் பொறுப்புக்கூறும் அதன் திட்டமே பெரும்பான்மையினர் சமூகத்தால் நேசிக்கப்பட்டு வேர்விட்டுள்ள ஆயுதப் படையினரை தண்டித்தல், வழக்குத் தொடுத்தல், வருத்துதல் போன்றவற்றை கொண்டிருப்பதால் எந்தத் தத்துவத்தின் அடிப்படை யில் சிறுபான்மையினரின் பெயரால் பொறுப்புக்கூறும் கடப்பாட்டுக்கான உள்ளத்தைப் புண்படுத்தும் விசாரணை களை எவராவது கோர முடியும்?

இலங்கையர்கள் முன்னாள் காலனித்துவ ஆட்சியாளர்களினதும் மற்றும் ஆக்கிரமிப்புக்காரர்களினதும் அச்சுறுத்தும் எச்சரிக்கைகளை அல்லது பண்டைய ஊடுருவல்காரர்களான அயல் பிரதேசத்து சட்டமன்ற தீர்மானங்களை பொருட்படுத்துவார்களா அல்லது தங்களது தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை, ஜனநாயகத் தெரிவான ஒரு தலைவரை, மற்றும் தன்னு டைய பிள்ளைகளைக் கொண்டிருக் கும் இராணுவத்தைப் பாதுகாப்பார் களா?

தங்கள் நாட்டைப் பாதுகாத்த இந்நாட்டு மக்கள், தேவையான எந்த நிலையிலும் அதைத் தொடர்ந்து செய்வார்கள். வெளியிடத்து தலையீடு களாகக் கருதப்படுபவைகளையும், தங்களது உள்நாட்டு குறைபாடுகளை யும் பொருட்படுத்த மாட்டார்கள் என்பதுதான்? ஒரு விவேகமுள்ளவரை சிந்திக்கத் தூண்டுவது எதுவென்றால் பெரும்பான்மையான இலங்கை மக்கள் மேற்கிலுள்ள மீள் அணிதிரண்டிருக்கும் மற்றும் பழிவாங்கும் எண்ணம் கொண்ட சக்திகளான தமிழ் புலம் பெயர்ந்தவர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் நிகழ்வுகளைக் காண்பிக்கும் புகைப்படங்களில் உள்ள புலிக் கொடியையும் தமிழ் ஈழ வரைபடத்தையும் (தீவின் வரைபடத்தில் வடக்கு கிழக்கை வித்தியாசமாக வர்ணம் தீட்டியுள்ளது) பார்க்க மாட்டார்கள் என்பது தான்.

முழுநாட்டுக்குமான அச்சுறுத்தலை அகற்றிய ஆயுதப்படையினரை, பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் முடுக்கிவிடப்படும் அல்லது பின் விளைவுகளைத் தூண்டும் ஏதாவது சக்திகள் உள்ளவரை இனங்களுக்கிடையேயான நல்லெண்ணம் சாத்தியப்படும் என்று ஒருவரால் எப்படி தீவிரமாக நம்ப முடியும்? பொறுப்புக்கூறும் விசாரணை மற்றும் அதிகாரப் பகிர்வு? இந்த நிருவாகத்தின் கீழோ அல்லது வேறு ஒன்றிலோ அதிகாரப் பகிர்வு அல்லது பொறுப்புக்கூறல் எனும் இரண்டில் ஒரு தெரிவு கிட்டுமா? தற்போதுள்ள நிருவாகமோ அல்லது வரப்போகும் வேறு நிருவாகமோ ஒரு முழு பொறுப்புக்கூறும் விசாரணைக்கு வழியமைத்து அதை இனங்களுக்கிடையேயான நல்லெண்ணம் மற்றும் சமரசத் தன்மையான தாராண்மை அளவுகளுடன் வழிநடத்திய பின்பு ஏற்படும் கடுமையான பின்னடைவுகளை அதனால் தவிர்க்க முடியுமா? எவ்வளவு காலத்துக்கு விக்கிரமசிங்க, கருணாநாயக்க, சமரவீர நிருவாகத்தால் பொறுப்புக்கூறல் மற்றும் அதிகாரப் பகிர்வினை நகர்த்த முடியும்?

தென்னாபிரிக்காவின் உண்மைகள் மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளுடன் இதனை சமாந்தரமாக இழுத்துவர ஒரு தீவிரமான பகுப்பாய்வாளரினால் எப்படி முடியும், அது பேச்சு வார்த்தைகள் மூலமாக சிறுபான்மை ஆட்சியிலிருந்து பெரும்பான்மை ஆட்சிக்கு உருமாற்றப் பட்டதுடன் அதன் பெரும்பகுதி கொண்டிருப்பது பெரும்பான்மையினருக்கு எதிராக சிறுபான்மையினர் இழைத்த பாவங்களை மீண்டும் சொல்லப்படுவதை? தென்னாபிரிக்க பொறிமுறைகளினாலும் நடவடிக்கைகளினாலும் ஏற்பட்ட விளைவு பெரும்பான்மைப் படைகள் பெற்ற இராணுவ வெற்றியுடன் எவ்வாறு தொடர்புபடும்?

சேர்பியன் அரசாங்கம் மிலோசவிக் மற்றும் மிலாடிக்கை ஹேக்கிடம் கையளித்ததை ஒரு தீவிர வர்ணனையாளர் எப்படி இதனுடன் சமாந்தரமாகத் தொடர்பு படுத்துவார்? இதில் தெளிவாகத் தெரியும் குறைபாடு சேர்பியா போரில் தோற்றுப் போனது ஆனால் இலங்கை வெற்றி பெற்றது.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம் பார்க்க...)

# போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ நாம் தயார்

## எச்.என்.பி. முகாமையாளர் பேச்சு

(சாவகச்சேரி)

போர்ச்சூழலினால் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் அவர்களுடைய தொழில் முன்னேற்றத்திற்கும் தேவையான உதவிகளைச் செய்வதற்கு எமது வங்கிக்கிளை மகிழ்ச்சியுடன் காத்திருப்பதாக ஹற்றன் நஷனல் வங்கியின் கைதடிக் கிளையின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான இ.தியாகராசா தெரிவித்துள்ளார்.


நேற்றுப் பகல் 12.00 மணியளவில் நடைபெற்ற ஹற்றன் நஷனல் வங்கியின் கைதடிக் கிளைத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு செயற்பாடுகளை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், வங்கியின் சமுக நலத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், பாடசாலை நூலகத்துக்கான நூல்களை பாடசாலை அதிபர்களிடமும், நவீல்ட் பாடசாலை மாணவர்களின் உபயோகத்திற்காக உணவுப் பொருட்களையும் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் வழங்கி வைத்தார்.

மேலும் நவீல்ட் பாடசாலைக்கு அதிநவீன குளிரூட்டி ஒன்றும், சலவை இயந்திரம் இரண்டும் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியோர்களின் பயன்பாட்டிற்கென சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டது. (11)

# தெற்கில் தீவிரமாகும் டெங்கு நோய்த் தாக்கம்



(கொழும்பு)

நாட்டில் டெங்கு நோயினால் 10 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பொதுமக்களை விழிப்புடன் செயற்படுமாறு சுகாதாரத்துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 6 மாத காலப்பகுதியில் டெங்கு நோய் பரவல் காரணமாக 73 பேர் மரணமாகினர் இந்தநிலையில், கொழும்பிலேயே அதிகளவில் டெங்கு நோயினால் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதனையடுத்து கம்பஹா மாவட்டத்தில் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைத் தவிர திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு போன்ற பகுதிகளிலும் டெங்கு தொற்றுக் காரணமாக பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாடு மட்டக்களப்பில் விசேட ஏற்பாடு

இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகத்தின் சார்பில் 15ஆவது இஸ்லாமிய தமிழிலக்கிய மகாநாடு வரும் ஜூலை மாதம் 08ஆம், 09ஆம் 10ஆம் திகதிகளில் ...யல்பட்டினத்தில் நடைபெறவுள்ளது.

இம் மகாநாட்டில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய கண்காட்சி, கருத்தரங்கம், பட்டிமன்றம், கவிதையரங்கம் எனப் பலவும் இடம்பெறவுள்ளன. முக்கிய தலைப்புகளில் ஆய்வுக்கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இம் மகாநாட்டையொட்டி வெளிநாடுவாழ் முஸ்லிம் மக்களுக்கு மகாநாட்டு ஏற்பாட்டுக் குழு பொருளாளர் ஹாஜி டி.ஏ.எஸ். முஹம்மத் அபூபக்கர் வெளி யிட்டுள்ள அறிக்கையில்,

இம் மகாநாட்டின் நிறைவு விழாவில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டவுள்ளன. அவற்றுள், வெளிநாடுவாழ் முஸ்லிம்கள் சந்திக்கும் முக்கிய பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் வகையிலும் தீர்மானங்கள் இயற்றப்படவுள்ளதாகவும் அவ் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# பொதுசன உறவை வலுப்படுத்த பொலிஸாருக்கு விசேட பயிற்சி



(கொழும்பு)

## புதிய பொலிஸ் மா அதிபர் அறிவிப்பு

யுத்த காலத்தின்போது பொலிஸார் ஆயுதம் ஏந்தி நிற்கவேண்டியதொரு நிலை காணப் பட்டதனால் முற்றுமுழுதாக தமது கடமையைச் சரிவர செய்ய அவர்களால் இயலாது போனதாக புதிய பொலிஸ் மா அதிபராகப் நேற்றுப் பதவி யேற்றுக் கொண்ட என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தமது பதவியினை ஏற்றுகொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்தகாலத்தில் பணிபுரிந்த அதிகாரிகள் அனைவரும் சாதாரண மக்களுடன் தொடர்பு கொள்ளும் விதம் தொடர்பிலும், அவர்களது பாதுகாப்புக் கடமைகள் தொடர்பிலும் பயிற்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுளளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஒரு சில பொலிஸ் அதிகாரிகளின் தவறுகளைச் சுட்டிக்காட்டப் போட்டி போட்டுக்கொண்டு முன்வரும் ஊடகங்கள் பல பொலிஸ் அதிகாரி களின் திறமையான நடவடிக்கைகளை வெளிப்படுத்த முன்வர வேண்டும் எனவும் அவர் ஊடகங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## எம்.ஓ.டி.நடைமுறை...

உறவுகள் வடபகுதிக்கு வரவிருப்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாகவே முன்னோடி நடவடிக்கையாக மேற்படி தடைகள் நீக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை, சர்வதேச மற்றும் உள்நாட்டு ஊடகவியலாளர்கள் வடபகுதிக்கு பயணிக்க இதுவரை இருந்த தடைகளும் தளர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கே, யாழ்ப்பாணம் தவிர, ஏ9 வீதிக்கு வெளியே வன்னியின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் எவரும் பயணிக்க முடியுமா? என்று செய்தியாளர்கள் கேட்டபோது தேசிய பாதுகாப்பு ஊடக நிலையத்தின் இயக்குநர் ஹலுகல்ல ஏனைய பகுதிகளுக்கு பயணிப்பதைப் போல எவரும் நாட்டின் எந்த இடத்துக்கும் பயணிப்பதில் இனி எந்த தடையும் இருக்காது என்று கூறினார்.

ஆனால், வன்னியில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாதுள்ள சில கிராமங்களில் மட்டும் பயணத் தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக நிலையத்தின் இயக்குநர் மேலும் தெரிவித்தார்.

அரச சார்பற்ற நிறுவனங்களும் வடக்கில் எந்த இடத்துக்கும் சென்று வர எவ்வித தடையும் இல்லை என்கின்ற போதிலும், அந்த நிறுவனங்கள் அங்கு தமது பணிகளை மேற்கொள்ள வேண்டுமானால் ஜனாதிபதி பணியகத்தின் சிறப்பு நிகழ்ச்சித் திட்டம் ஊடாகவே அவற்றை மேற்கொள்ள முடியும் என்று ஹலுகல்ல பி.பி.சி.யிடம் தெரிவித்தார்.

இந்த எம்.ஓ.டி. நடைமுறையை நீக்கியமைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் புலி...

கலந்து கொண்டனர்.

முதல் முறையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா நகர சபைத் தலைவர் ஐ.கனகையாவும் இந்த வைபவத்தில் கலந்து சிறப்பித்தார்.

இதுவரை காலமும் 24 நிலையங்கள் இயங்கி வந்தபோதும், தற்போது எட்டு நிலையங்களில் 2, 864 பேர் மட்டுமே உள்ளனர் என குறிப்பிட்ட சுனந்த ரணசிங்க, நெளுக்குளம் தொழில் நுட்பக் கல்லூரி புனர்வாழ்வு நிலையம் இந்த மாதத்துடன் மூடப்பட்டு கல்லூரி நிர்வாகத்திடம் கட்டடத்தைக் கையளிக்கவுள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

கடந்த முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு 326 பேர் தோற்றினார்கள். இவர்களில் 266 பேர் சித்தியடைந்துள்ளனர் இம்முறை 186 பேர் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். திறமையான பெறுபேறுகளை பெறுவார்கள் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

இனியும் தவறான வழியில் செல்லாது, நாட்டுக்கும் உங்கள் சமுகத்திற்கும் ஆற்றவேண்டிய பணிகளை மேற்கொள்ளுங்கள் என சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார். (39)

## பாதாள உலகத் தலைவர் தெற்கில் சுட்டுக்கொலை




(கொழும்பு)

தென்மாகாண சபை உறுப்பினர் டெனி ஹித்தெடியகே படுகொலை உட்பட 35 மனிதக் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் பாதாள உலகத் தலைவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தென் மாகாணத்தில் பல குற்றச்செயல்களைப் புரிந்து வந்த இவர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் நேற்று அதிகாலை பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பலியானவர் நெலுவ பிரியந்த என்ற பெயருடையவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நெருக்கமடையும்...

அமெரிக்க சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இளைஞர் விவகாரங்களை ஊக்குவிப்பது தொடர்பில் இந்த ஆண்டு கொண்டாட்டங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் இளைஞர்கள் என சுட்டிக்காட்டியுள்ள அவர், பல்வேறு வழிகளில் இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு அமெரிக்கா உதவிகளை வழங்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டு. காளியம்மன் வருடாந்த உற்சவம்


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே அமைந்துள்ள ஏறாவூர் ஸ்ரீ பத்திர காளியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை புதன்கிழமை மடையெடுத்தலுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணியளவில் தீ மிதிப்புடன் நிறைவு பெறவுள்ளது.

இவற்றுள் எதிர்வரும் 07ஆம் திகதி பிரம முகுர்த்த வேளையில் திருநடை திறத்தலும், 08ஆம் திகதி நித்திய சடங்கும், 09ஆம் திகதி மடையெடுத்தலும், 10ஆம் திகதி விசேட குங்கும அர்ச் சனை விசேட பூசையும், 11ஆம் திகதி ஆராத்தி வைபவமும், 12ஆம் திகதி விசேட பூசை ஆராதனைகளும், 13ஆம் திகதி பெண்கள் சடங்கு ஆராத்தி பூசைகளும், 14ஆம் திகதி வீரகம்பம் வெட்டுதலும், 15ஆம் திகதி அம்பாள் முத்துச் சப்பற ஊர்வலமும், 16ஆம் திகதி நோர்ப்பு நெல் குற்றுதலும் 17ஆம் திகதி தீ மிதித்தலுடன் நிகழ்வு நிறைவு பெறவுள்ளது.

## செய்திப்பாணம்

**பேச்சுவார்த்தை மேசைதனில் பேரம்பேசிப் போனகாலம்**
**மூச்சுவிடவும் தமிழர் முடியாமலே - ஆச்சுதாம்**
**வன்னிபிடிபட்ட பின்னும் விடவில்லை தொடர்கிறதே**
**சன்னி பிடிச்சு சாகவோ சனம்?**



# சனல் - 4 போலி ஆவணம் ஆய்வு செய்கிறது பாதுகாப்பு அமைச்சு




(கொழும்பு)

சனல் - 4 போலி வீடியோ ஆவணம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சும் நிபுணர்கள் குழுவும் இணைந்து புதிய ஆய்வொன்றினை ஆரம்பித்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல நேற்றுத் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு கிடைக்கப் பெற்றிருக்கும் மேற்படி சனல் - 4 வீடியோ ஆவணம் போலியாக சித்தரிக்கப்பட்டதென்பதற்கு தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளனவென்றும் அவர் கூறினார்.

திருத்தங்கள் மேற்கொள்ளப்படாத உண்மையான வீடியோ ஆவணத்தில் தோன்றும் நபர்களின் பேச்சுவார்த்தை தமிழிலேயே உள்ளது. இருப்பினும் அதற்குப் பதிலாக சிங்கள உரையாடல்களை மேற்படி வீடியோக் காட்சிக்கு பதிவு செய்துள்ளனர்.

வீடியோ காட்சியில் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களே தோன்றுகின்றனர். இவர்கள் இராணுவத்தினரின் சீருடையில் காட்சியளிக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். எல்.ரி.ரி.ஈயினர் தோற்கடிக்கப்பட்டமையை அடுத்து புலிகளுக்கு ஆதரவான குழுவினர் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் சனல் - 4 போலி விடியோ ஆவணங்களை தயாரிப்பதன் மூலம் வீணான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் இராணுவப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் நேற்று முன்தினம் ஐ.நாவின் இலங்கைக்கான தூதுவரும் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியுமான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா உரையாற்றுகையில் - சனல் - 4 ஆவணத்தில் வெளியாகும் சிங்கள உரையாடல் ஆவணம் சித்தரிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலைக்கு சிறிதும் பொருத்தமில்லையெனவும் கூறினார்.

மேற்படி ஆவணத்தில் தனிப்பட்ட நபர்கள் இராணுவ சீருடையில் காணப்படுவதனை சுட்டிக்காட்டிய மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இதற்கு முன்னதாக புலிகள் ஸ்ரீ மகாபோதி வளவிலுள்ள அப்பாவி பக்தர்களை கொலை செய்யும் போதும் கட்டுநாயக்கா விமான நிலைய தாக்குதலின் போதும் இராணுவ சீருடையில் தோன்றியிருந்ததை நினைவு கூர்ந்தார்.

# யாழ். பல்கலைக்கழக சூழலில் கெட்டுப் போகும் சுகாதாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஆனந்தகுமாரசுவாமி பெண்கள் விடுதிக்கும் விஞ்ஞான பீடத்திற்கும் இடையிலுள்ள புகையிரத வீதியை அண்டிய பகுதியில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் இவ் வீதியைப் பயன்படுத்தி வரும் மாணவர்களும், பாதசாரிகளும் பல்வேறான அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்த வீதியை அண்டிய இடத்தில் கழிவுப் பொருட்கள் கொண்டுவந்து கொட்டப்படுகின்றது. இதனை அப்பகுதியில் திரியும் கட்டாக்காலி நாய்கள் மேலும் கிளறி அவற்றை வீதிகளில் பரப்பி விடுகின்றன.

பல்வேறு வகைப்பட்ட துர்நாற்றம் வீசும் கழிவுப் பொருட்கள் இப்பகுதியில் கொட்டப்பட்டு வீதிகளிலும் பரவிக் காணப்படுவதால் வீதிகளில் பயணிப்போர் மிகவும் எச்சரிக்கையுடனேயே செல்லவேண்டியிருக்கிறது.

குறிப்பாக பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் 5 விழிப்புலனற்ற மாணவர்கள் இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர். அவர்கள் இவ் வீதியால் செல்லும்போது மிகவும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

# வீதி விபத்துக்களைத் தடுக்க புதிய ஒழுங்கு விதிகள் அமுல்

(கொழும்பு)

அதிகரித்துவரும் வாகன விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் புதிய விதிமுறைகளை நடைமுறைப்படுத்தவுள்ளது. இதனடிப்படையில் 12 வயதுக்கு குறைந்த பிள்ளைகளை வாகனத்தின் முன் ஆசனத்தில் அமர்த்தி பயணத்தை மேற்கொள்வது தடைசெய்யப்படவுள்ளதுடன் கண்டிப்பாக அனைவரும் வாகன ஆசனப்பட்டியை அணிந்திருக்க வேண்டும் எனவும் ஒழுங்கு விதிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இந்த புதிய வாகன விதிகளின் அடிப்படையில் வாகன அனுமதி பத்திரங்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு வாகன விதிகளை மீறுவோருக்கு அதிலிருந்து புள்ளிகள் குறைக்கப்படும். அதிகரித்துச் செல்லும் வாகன விபத்துக்கள் காரணமாகவே இந்தப் புதிய விதி அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இந்த புள்ளி வழங்கும் திட்டத்தின் கீழ் வாகன அனுமதிப் பத்திரம் ஒன்றுக்கு 48 புள்ளிகள் உரித்தாகும். விபத்துக்களை பொறுத்து அந்தப் புள்ளிகள் குறைக்கப்படும். அபாயகரமான விபத்து ஒன்றை வாகன சாரதி சந்திப்பாரேயானால் 8 புள்ளிகள் குறைக்கப்படும்.

அதேவேளை மோசமான விபத்து ஒன்றை சந்திக்கநேரும் பட்சத்தில் 2 புள்ளிகள் குறைக்கப்படும். அத்துடன் இதற்கான தண்டப்பணம் அதிகமாக இருக்கும் என ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்தை தேசிய வீதி பாதுகாப்பு பேரவை தலைவர் மனோ விஜயரட்ண வரவேற்றுள்ளதுடன் மோசமான விபத்துக்கள் நாளொன்றுக்கு ஆறு வரையில் இடம்பெறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துக்கள் காரணமாக இவ்வருடம் இதுவரை 1102 பேர் பலியாகியுள்ளனர். அதேவேளை கடந்த வருடம் 2515 பேர் வீதி விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர். கடந்த ஆறு மாத காலத்தில் 3016 மோசமான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் கடந்த வருடம் மாத்திரம் 5529 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஒபாமா கொலை! செய்தியால் பரபரப்பு

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கொலை செய்யப்பட்டுள்ளதாக நேற்று அமெரிக்காவின் பொக்ஸ் நியூஸ் தொலைக்காட்சியின் ட்விட்டர் செய்தி இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ட்விட்டர் இணையத்தளத்தில் பொக்ஸ் நியூஸ் தொலைக்காட்சியின் "பொக்ஸ் நியூஸ் பொலிட்டிக்ஸ்" எனும் செய்தி இணைப்பிற்குள் சட்டவிரோதமாக ஊடுருவிய குழுவொன்றே வதந்தியை செய்தியாக பரப்பியுள்ளது.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மீது இத்தகைய எந்தத் தாக்குதலும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும்.

அமெரிக்காவின் அயோவா மாநிலத்தில் உணவு விடுதியொன்றில் வைத்து ஜனாதிபதி பராக் ஒபாமா சுட்டுக்கொல்லப்பட்டதாக மேற்படி ட்விட்டர் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. இரு துப்பாக்கிக் குண்டுகள் அவரைத் தாக்கியதாகவும் கூறப்பட்டது.

# நிர்வாக சேவைப் பயிற்சி யாழில் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியிலிருந்து நிர்வாக சேவைப் பயிற்சிக்காக யாழ்ப்பாணம் வந்துள்ள இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் யாழ். செயலக மகாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் பணிமனைகளில் நடைபெறும் பயிற்சி நெறிகளில் கலந்துகொள்வதற்காக 135 பயிற்சியாளர்கள் வருகை தந்திருந்தனர். மேற்படி பயிற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்வினை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ். பாதுகாப்பு கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க, வடமாகாண செயலாளர் எஸ்.ரங்கராஜன், பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி மற்றும் பணிப்பாளர்கள், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவுநர், சிரேஷ்ட ஆலோசகர், பிரதேச செயலர்கள், இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (5)

# விமான சேவைக் கட்டணங்கள் குறைப்பு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து உலகின் பல பாகங்களுக்கும் செல்லும் விமான சேவை கட்டணங்களில் போட்டித்தன்மையுடன் கூடிய நெகிழ்வான குறைப்பினை ஏற்படுத்தியுள்ளதாக ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் அறிவித்துள்ளது.

இதன்படி மாணவர் விஸாவில் லண்டன், கோலாலம்பூர் மற்றும் பெங்களூருக்கு ஒரு வழிப் பாதை விமானச்சீட்டுக்கு விசேட கட்டணமும், மத்திய கிழக்கு நாடுகளான டோகா, டுபாய் மற்றும் சவுதி அரேபிய நாடுகளுக்கு பணிக்காக செல்பவர்களுக்கு விசேட கட்டணமும், யாத்திரிகர் களாக இந்தியா, ஜித்தா மற்றும் தாய்லாந்துக்கு செல்பவர்களுக்கு விசேட கட்டணமும் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இவர்களுக்கு 15 தொடக்கம் 20 சதவீதம் வரை கழிவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அலுவலக செய்தியாளர்கள் தேவை

எமது பத்திரிகை நிறுவனத்தில் அலுவலக செய்தியாளராகப் பணியாற்றுவதற்கு அனுபவமும் திறமையும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் –

- யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பது விரும்பத்தக்கது. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- தமிழ் மொழியில் திறமையும் ஆங்கில/சிங்கள அறிவும் விரும்பத்தக்கது.
- பத்திரிகை நிறுவனங்களில் செய்தியாளராகப் பணியாற்றிய அனுபவம் அல்லது பத்திரிகைத் துறையில் அதீத ஆர்வமும் துடிப்பும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- வெளிக்கள வேலையில் ஈடுபடத்தக்க உடல் ஆரோக்கியம் உள்ள 35 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'அலுவலக செய்தியாளருக்கான விண்ணப்பம்' என்று தவறாமல் குறிப்பிடவும்.
- விண்ணப்பங்கள் அனைத்தும் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர்

**'ஆளணி முகாமையாளர்'**

**'தினமுரசு' இல 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## வன்னியில் கசிப்பு உற்பத்தி சூத்திரதாரிக்கு சிறைத்தண்டனை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவருக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தினால் 50 ஆயிரம் ரூபா அபராதமும் 2 மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரை கிளிநொச்சிப் பொலிஸார் கைதுசெய்து நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

நீதிபதி விசாரணையை மேற்கொண்டபோது குறித்த நபர் ஏற்கனவே நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்ட நிலையில் மீண்டும் அதே குற்றத்தைச் செய்தமையால் நீதிபதி 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், அபராதத்தைச் செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும், அத்துடன் 2 மாதம் கட்டாய சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் தீர்ப்பளித்தார். (110)

# கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சாரம் வட்டக்கச்சியில் பிசுபிசுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வட்டக்கச்சி சந்தையடியில் இடம்பெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சிறிதரன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

கரைச்சி பிரதேச சபைக்கான உள்ளூராட்சித் தேர்தலில் 41 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். இதில் வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் 10 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்திற்கு 50 பேர் வரையிலான மக்களே வந்திருந்தனர். இராணுவத்தினரின் கெடுபிடி காரணமாக மக்கள் கூட்டத்திற்கு வரவில்லை என சிறிதரன் எம்.பி. ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

ஆனால் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்குச் சென்று வீர வசனங்கள் கேட்கும் மனநிலையில் இப்பகுதி மக்கள் இல்லை என்பதே உண்மை நிலைவரம் என கூட்டத்திற்கு வந்திருந்த ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். (29)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.